Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
சகல நிகழ்வுகளுக்கும் ராசியான ஸ்தாபனங்கள்
மகாராசி சில்க்ஸ்
ரோசி சில்க்ஸ்
T.P. 0777 286247

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி - 14 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 16 [29.12.2004] புதன்கிழமை இதழ்: 90

# அரசாங்க - சர்வதேச உதவிகள் வட.கிழக்கு மக்களுக்கு இல்லை!



இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப்பொருட்களுடன் புறப்படத் தயாராகும் இஸ்ரேலிய விமானம் ஒன்று

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி என்ற கடற் பூகம்பத்தின் விளைவாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியின் கரையோரப் பகுதிகள் மிகமோசமாகப் பாதிப்படைந்துள்ள நிலையில் -

சர்வதேச சமூகத்திடமிருந்தோ அரசாங்கத்திடமிருந்தோ எந்த உதவியோ அல்லது நிவாரணமோ இதுவரை கிடைக்காததால் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் விசனம் அடைந்துள்ளனர்.

நாட்டின் வடக்கு - கிழக்கு தெற்கு மேற்கு கரையோரங்களைத் தாக்கிய கடற்கொந் தளிப்பினால் பெருமளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நாடுமுழுவதும் உயிரிழந்தோர் தொகை 25 ஆயிரமாக இருக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு - கிழக் குப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கில் மட்டும் 9852 பேர் உயிரிழப்பு!

கடற்கொந்தளிப்பினால் தமிழர் தாயகப் பகுதிகளில் 9852 பேர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் 9771 பேர் காணாமற்போயிருப்பதாகவும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் வெளியிட்ட புள்ளி விபரங்களில் இருந்து தெரியவரு கிறது.

நேற்றிரவு 8 மணி வரையான நிலவரப்படி புலிகளின் சமாதானச் செயலகம் மூலம் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் வருமாறு -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி பூகம்பத்தால் பலியானோர் 55 ஆயிரம்

கடற்கொந்தளிப்பு மற்றும் புவி நடுக்கம் காரணமாக தெற்காசிய நாடுகளான இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, தாய் லாந்து, மலேசியா, மியான்மார், மாலைதீவு, பங்களாதேஷ் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 55 ஆயிரம் பேர் பலியா கியுள்ளதாக ஏ.எவ்.பி. செய்திகள் தெரிவித் தன.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் விபரம் அறிவிப்பு!

கடற்கொந்தளிப்பினால் யாழ்.மாவட்டத் தில் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை யாழ்.மாவட்ட அரச செயலகம் நேற்று வெளி யிட்டது.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் 640 பேர் உயிரிழந்து, 530 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் 2000 பேர் காணாமற்போயுள்ளனர் அல்லது உயிரிழந்துள்ளனர்.

இந்த 640 பேரில் - 13 பேர் யாழ். போதனா வைத்தியசாலையிலும், 14 பேர் கீரிமலை யிலும், இருவர் காரைநகரிலும், 99 பேர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரின் வழிகாட்டலில் மீட்புப் பணிகள் தீவிரம்!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

கடற் கொந்தளிப்பால் தமிழீழ மக்களுக்கு ஏற்பட்ட பாரிய உயிரிழப்புகளால் தமிழீழ தேசியத் தலைவர் ஆழ்ந்த துயரத்தில் இருப்ப தாகவும், அவர் - துறைசார் பொறுப்பாளர் களையும், தளபதிகளையும், போராளிகளை யும் உடனடியாக மக்களை மீட்டு பாதுகாக் கும் பணிகளை செய்யப் பணித்து அதனை நேரடியாகச் செயற்படுத்தி வருவதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில் -

எமது சகல வளங்களையும் உடனடி யாகப் பயன்படுத்தி மக்களை மீட்டு பாது காத்து வருகிறோம். அந்த வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ சுகாதாரப் பிரிவு, விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவு, தமி ழீழப்போக்கு வரவுக்கழகம், தியாகி திலீபன் மருத்துவ சேவையினர், களமருத்துவப் பிரிவு, படையணிகள், கடற்புலிகள், ஊடகத்துறை யினர், பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவினர் என அனைவருடன் எமது அன்புக்குரிய மக் கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் தொண்டர் கள் என அனைவரும் உடன் பணியில் ஈடு பட்டு தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

கல்முனையில் கடற்கொந்தளிப்பில் உயிரிழந்த ஆயிரக்கணக்கானோரின் சடலங்கள் ஒன்றாகப் புதைப்பதற்காக ட்ரக்கில் கொண்டுவந்து குவிக்கப்படுகிறது.



## வெள்ளியன்று துக்கதினம் அரசியற்துறை வேண்டுகோள்!

கடற்கொந்தளிப்பால் இறந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழ மையைத் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

அன்றையதினம் அனைத்து மக்களும் கறுப்புக் கொடியினை அணிந்தும் முக்கிய இடங்களில் சோககீதங்களை இசைத்தும் இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துமாறும், அன்றையதினம் நண்பகல் 12 மணிமுதல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு கடற்புலிகள் சாவு!

26-12-2004 அன்று ஏற்பட்ட கடற் கொந் தளிப்பால் கடற்கரும்புலி ஒருவரும், கடற் புலிப் போராளி ஒருவரும் சாவடைந்துள்ள தாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி மேஜர் தர்மேந்திரன் என அழைக்கப்படும், முனைக் காடு, 7 ஆம் வட் டாரம், கொக்கட்டிச்சோலை மட்டக்களப் பைச் சேர்ந்த கனகசபை சின்னப்பொடியன், கடற்புலிப் போராளியான வீரவேங்கை கடல் அறிவன் என அழைக்கப்படும் சாரதா வீதி, சங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஜேர்மன் அதிபரும் தென்னிலங்கையில் சிக்கினார்!

ஜேர்மனியின் முன்னாள் அதிபர் ஹெல் மட் கோல் தென்பகுதியில் ஒரு ஹொட்டலில் தங்கியிருந்தபோது, கடற்கொந்தளிப்பு ஏற் பட்டதாகவும் - இவரை விமானப்படை ஹெலி கொப்ரர் ஒன்று நேற்று மீட்டதாகவும் தெரிய வருகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது -

தென்னிலங்கையில் விடுமுறையைக் கழிப்பதற்காக ஹெல்மட் கோல் குழுவின ருடன் வந்திருந்தார். இவர் அங்கு தங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.

# மணற்காடுப் பகுதியில் 56 சடலங்கள் அடக்கம்!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைத்து பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் மட்டும் 87 சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. நேற்று நண்பகல் 11 மணிவரை மேலும் 18 சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. இவ்வாறு கையளிக்கப்பட்ட சடலங்களில் கடற்படை சிப்பாய் ஒருவரதும் அடங்கியுள்ளது.

நேற்று கையளிக்கப்பட்ட சடலங்களின் விபரம் வருமாறு - எம்.ஜி.சுனில் எம்.ஜி.என் மதுசங்கர் (இந்துருவ கோணகலவை (கடற்படை சிப்பாய) அம்பிகாவதி எழிலரசன் ($1^1/_2$) தும்பளை கிழக்கு, செபஸ்ரியான்பிள்ளை நிறக்சன் (3) யாகப்பு றோசம்மா (56), றொபேட் தயாளி (3), றப்பியர் திரேசம்மா (60), யோசப் ஆரோக்கியநாதன் பிரான்சிஸ் அம்மா (52), ரோபேட் மரியசீலர் இலிசியா (15), பிரான்சிஸ் சத்தியசீலன் செல்வா (4), இராசன் நீலியா (04), வாசின்ரன் அமிசா (09), மரியஜேசு ஜினோட் துஷ்யந்தன் (8), பேதுருப்பிள்ளை பிறிஸ்ரன் (8), இமானுவேல் மெல்சியா (8) றொன்சலா கீதன் லூத்து மரியராணி (18), எட்வின்ராசா நிதர்ஸன் (8), செபஸ்ரியன்பிள்ளை இருதயராணி (16) ஆகியோரின் சடலங்களே கையளிக்கப்பட்டன.

இதன்மூலம் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 105 ஆக உயர்ந்துள்ளது.

இவற்றைவிட மணற்காட்டுப் பகுதியிலிருந்து மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டுவர முடியாமல் சிதைவடைந்த நிலையிலிருந்த சடலங்களை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றக்குழுவொன்று சென்று பார்வையிட்டது. இதில் நேற்று மட்டும் 14 சடலங்கள் மணற்காடு கிராமசேவகர் தோமஸ் யூட் முன்னிலையில் மணற்காடு சேமக்காலையில் புதைக்கப்பட்டன. இவ்வாறு புதைக்கப்பட்ட சடலங்களின் விபரம் வருமாறு -

ஆ.திரேசம்மா (83), பன்னீர்ச்செல்வம் சந்திரா (40), பன்னீர்ச்செல்வம் டிலக்ஸன் (8), வாசின்ரன் ரவிக்கா (12), மதியழகன் மயூரினா (7), சாளினி (2), ரவி அம்மன் (38), எட்வென்ராசா விதர்ஸன் (10), இமானுவேல் ரஜீவன் (11), லாஸஸ் டயானி (04), ஜோச் மரியசீலன் யூரினா (07) போன்றவர்களின் சடலங்களே புதைக்கப்பட்டவைகளாகும்.

இதுவரை மணற்காட்டுப் பகுதியில் 56 சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், 71 பேர்வரை என்னஆனார்கள் என்ற நிலவரம் தெரியாதுள்ளதாகவும் கிராமசேவகர் குறிப்பிட்டார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் 8 படையினரதும், 7 கடற்படையினரதும் சடலங்கள் உட்பட 40 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், 25 பேர் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

# 'நமது ஈழநாடு' நிறுவனத்தால் உதவிப்பொருட்கள் சேகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டமக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்குவதற்காக 'நமது ஈழநாடு' நிறுவனம் நேற்று முதல் உதவிப்பொருட்கள் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளது.

நேற்றைய தினம் அரியாலை கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், பாஷையூர், பகுதிகளில் இந்த பொருட்சேகரிப்பு இடம்பெற்றவேளை- அந்தப் பகுதி மக்கள் உலருணவு பால்மா வகைகள், உடுபுடவைகள் போன்றவற்றை பெருமளவில் வழங்கியுள்ளனர். இன்றும் இந்த உதவிப்பொருள் சேகரிக்கும் பணி இடம்பெறும்.

# காயமுற்றோர் விபரம் ஆங்கில மொழியிலேயே!

(யாழ்ப்பாணம்)

கடலின் சீற்றத்தினால் காயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் பெயர்கள் யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் ஒட்டப்பட்டுள்ளன.

எனினும் இந்தப் பெயர்களில் பெரும்பான்மையானவை ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெயர்கள் முழுவதையும் தமிழ்மொழியில் எழுதுவதன் மூலம் தாம் உரிய இடத்திற்கு சென்று நோயாளரைப் பார்வையிடமுடியும் என காயமடைந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.


## சிறு விளம்பரம்

**வீடு வாடகைக்கு**

சுண்டுக்குளியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு - 38/1, சோமசுந்தரம் அவன்யு, சுண்டுக்குளி
T.P - 021 222 59621 (1009)

**8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



எட்டாத இடம் சென்று
எட்டாண்டுகள் முடிந்தாலும்
எம் நெஞ்சை விட்டகலா
நினைவுடன் வாழும்

- குடும்பத்தினர்

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித் (இரு வேடம்), பூஜா நடித்த



அட்டகாசம் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

I ROBERT

**ராஜா** யாழ்ப்பாணம்.

அர்ஜுன், ரீமாசென், வடிவேல், தேவயானி, பிரகாஸ்ராஜ் நடித்த

கிரி (ரீல்ஸ்)

(இயக்கம் சுந்தர்C)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

ANACONDA - 2 (ஆங்கிலப் படம்)

கா.நேரம்-10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே)

நிதி உதவிக்காட்சி

1.1.2005 அன்று M.G.R நடித்த

உலகம் சுற்றும் வாலிபன் (ரீல்ஸ்)

இப்பட வசூல் பணம் வடக்கு - கிழக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கப்படும்.

கா.நேரம்-10.30, 2.30, 9.30, 6.30 (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்



இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த

ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக யாழ்.மாவட்ட அரசியற துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப்பொருட்கள் சேகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

பாரிய இயற்கை அனர்த்தத்தால் எமது பிரதேசம் பெரிய அளவில் அழிவைச் சந்தித்திருக்கிறது. 80 வீதமான உடமை இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் எதுவுமற்ற நிலையில் உள்ளனர்.

வடக்கு - கிழக்கு பகுதியில் பெருமளவு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது பெருமளவில் சடலங்கள் கரையொதுங்கத் தொடங்கியுள்ளன. இடம்பெயர்ந்து நலன் புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் சுகாதாரம், குடிதண்ணீர் போன்றவை சீர்படுத்தப்படவேண்டும்.

குழந்தைகளுக்கான படுக்கை விரிப்புக்கள், நுளம்பு வலைகள் வழங்குதல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய அவசர உதவிகள் உடனடியாக செல்லாதது கவலைக்குரியது. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய உதவிகளை வழங்க வேண்டுமென்பதே எமது நோக்கமாகவுள்ளது.

நிறுவனங்கள் சார்ந்த அமைப்பு மூலமாகவே மக்களிடம் பொருட்கள் சேகரிக்கப்பட்டு அவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைய வேண்டும்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுத்த கட்ட நடவடிக்கையாக அவர்களுக்கு நிவாரணம் வழங்க அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும். அப்போதுதான் அவர்களுக்குரிய உதவிகள் உரிய முறையில் சென்று சேரும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.


## மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

INSTITUTE OF INFORMATICS STUDIES

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் எமது உடன் பிறப்புக்களிற்கு உதவிக்கரம் நீட்டுமுகமாக IIS சமூகத்தினரால் விசேட ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன. எனவே, இது தொடர்பான மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று 29.12.2004 காலை 10 மணிக்கு IIS பிரதான மண்டபத்தில் இடம்பெற இருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இயக்குநர்,
IIS,
யாழ்ப்பாணம்.

(சி-3535)

## மரண அறிவித்தல்



கந்தசாமி இலட்சுமியம்மா



தங்கலிங்கம்

திருப்பூரி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், வியாபாரிமூலை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இலட்சுமியம்மா மற்றும் அவரது மூத்த மகனான தங்கலிங்கம் இருவரும் 26.12.2004 அன்று இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தால் அகால மரணமடைந்துவிட்டனர்.

அகால மரணமான தங்கலிங்கம் - சீதாதேவி, சிவலிங்கம், அமிர்தலிங்கம், மருதலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயவீரசிங்கம், புவனேஸ்வரி, கமலாதேவி, சூரியகலா ஆகியோரின் மைத்துனரும் ஆனந், ஜெகன், பகீரதன், செந்தாளன், சித்திரா, சரிதா, அனிதா ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் சாந்தலிங்கம், யசோதா, ஜெயந்தி ஆகியோரின் பெரிய மாமனாரும் கிருபாகரன், யசோதரன், ஜெயப்பிரகாஷ், ஜெய ஆகாஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

இவர்கள் இருவரதும் இந்த அகால மரண தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
ஆனந்த் [அண்ணா]
பேராமகன்

(சி-3562)


## கொமர்ஷல் வங்கி சேவை நேரம்

கொமர்ஷல் வங்கியில் நாளை மறுதினம் காலை 9 மணி முதல் 2 மணிவரை வாடிக்கையாளர்களுக்கான சேவை நடைபெறுமென்று யாழ். கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## இந்துக் கல்லூரி மாணவருக்கு

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்கள் சேகரிக்கும் பணியில் யாழ்.இந்துக் கல்லூரியின் 2006 ஆம் ஆண்டின் அனைத்துப் பிரிவு மாணவர்களும் ஈடுபடவுள்ளனர். இதற்காக மேற்படி பிரிவின் அனைத்துப் பிரிவு மாணவர்களையும் காலை 9.00 மணிக்கு பாடசாலையில் ஒன்றுகூடுமாறு உயர்தர பிரிவு மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## கிராம அலுவலர்களின் கவனத்திற்கு

கடற்கொந்தளிப்பினால் கடற்கரையோரத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குப் பொறுப்பான கிராம அலுவலர்களை இன்று பருததித்துறை மாவட்ட நீதிமன்றத் திற்கு வருமாறு மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தெரிவித்துள்ளார். (12)


## முக்கிய அறிவித்தல்

### வருடாந்த பொதுக்கூட்டம் பிற்போடுதல்

எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெறவிருந்த வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை உரிமையாளர்கள்,நெறியாளர் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு, கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறியத்தரப்படும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| தலைவர் | செயலாளர் |
| கி. பாஸ்கரன் | க. சி. மணியம் |
| வ.பி.பா.ஊ.கூ.சங்கம் | வ.பி.பா.ஊ.கூ.சங்கம் |
| பரந்தன், | பரந்தன், |
| கிளிநொச்சி | கிளிநொச்சி. |

# தேசிய துக்கதினமாக 5 நாட்கள் பிரகடனம்!

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக - எதிர் வரும் 31 ஆம் திகதி தொடக்கம் 5 நாட்களுக்கு துக்கதினம் அனுஷ்டிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இசை நிகழ்ச்சிகள் உட்பட அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்துச் செய்யப்படுவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது நிகழ்ந்துள்ள பேரழிவைக் கண்டறிந்து விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் குழுவொன்று நியமிகப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் மா தட்டுப்பாட்டைத் தடுக்கும் நோக்கில் பிறிமா நிறுவ்னத்திலிருந்து மாவை அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தே)

# பேரழிவைச் சந்தித்த வட-கிழக்குக்கு சர்வதேச உதவிகள் கிடைக்கவில்லை!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

**இயற்கை அனர்த்தத்தால் பேரழிவுகளைச் சந்தித்த வடக்கு - கிழக்குப் பகுதி மக்களுக்கு எந்தவொரு நாடும், சர்வதேச உதவி வழங்கும் நிறுவனமும் இது வரையில் தொடர்பு கொள்ளவில்லை என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.**

**இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-**



வடமராட்சி கிழக்கு, முல்லைத் தீவு மாவட்டத்தின் கரையோர கிராமங்கள், அனைத்துப் பகுதிகளும் கடல் நீரால் மூழ்கடிக்கப்பட்டுள் ளன. மிகப்பெரிய மனித அவலம் நடைபெற்றுள்ளது. ஆயிரக்கணக்கான உடல்கள் மீட்கப்பட்டு, தற்போது தகனம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றைவிட ஆயிரக்கணக்கான மக்கள் காணாமற்போயுள்ளனர்.

இந்த அனர்த்தத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். பல்லாயிரம் மக்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, பளைப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தஞ்சமடைந்துள் ளனர். இதனால் அங்கு இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த மக்களுக்கான ஒழுங்குகளை எமது போராளிகள் அனைவரும் இணைந்து மீட்பு பணிகளிலும், பராமரிப்பு பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை இந்த மக்களுக்கான உதவிகள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

உள்ளூர் வளங்களை வைத்துக் கொண்டே இவற்றை நாம் செயற்படுத்தி வருகிறோம்.

தற்போது காயமடைந்த மக்களுக்கான மருத்துவப்பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளிகள், மருத்துவர்கள் மிகப்பெரிய பணியை ஆற்றி வருகின்றனர். யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும், வைத்தியர்களும் வருகை தந்து அவர்களுடன் இணைந்துள் ளனர். தீவிர அளவில் மருத்துவப் பணிகள் நடைபெற்றவண்ணமுள் ளன. நாங்கள் இந்த மக்களுக்கான உதவிகள் தொடர்பாகவும் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

சர்வதேச உதவிகளைப் பெற்று- அவற்றை வழங்குவதற்காக இன்று மாலையும், நாளை காலையும் இதற்கான சந்திப்புக்களை நடத்தி ஒரு செயலணிக்குழுவொன்றை அமைக்கவுள்ளோம்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான சமைத்த உணவுகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கிவருகின்றனர். வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகளும், பாரிய உதவிகளைச் செய்வதாகக் கேள்விப்படுகிறோம். இந்த உதவிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இங்கே கொண்டுவந்து மக்களுக்கு அவசர மனதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றது.

இங்கே காணாமற்போன மக்களை மீட்கும் பணியில் போராளிகளும், பொதுமக்களும் இணைந்து மீட்புப்பணியை மேற்கொண்டு வருகிறார்கள்.

தொடர்ந்து மீட்புப்பணிகளும், மக்களைப் பராமரிக்கும் பணிகளிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்திலும் பச்சிலைப்பள்ளி பகுதிகளிலுமே நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்கு, முல்லைத் தீவு மாவட்டம் போன்ற அனைத்துக் கரையோரக் கிராமங்களிலும், முழுமையாகப் பாதிக்கப்பட்டுள் ளன. பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. இது வரையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தற்போது அவை அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதைவிட பல ஆயிரமாக அதிகரிக்கலாமென நம்புகின்றோம்.

வெளிநாட்டிலிருந்து எங்களுடைய தமிழ் அமைப்புக்கள் இவர்களுக்கான உதவிகளைச் செய்வதற்கு என்னுடன் தொடர்பு கொணடு, அதற்கான உதவிகளைச் செய்வதற்கு முன்வந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# சடலங்களை அடையாளம் காண பிரசுரங்கள் வெளியிடப்படும்!

## மட்டக்களப்பில் புதிய நடைமுறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை அடையாளம் காணப்படாத சடலங்களை உறவினர்கள் அடையாளம் கண்டு பொறுப்பேற்பதற்கு வசதியாக, சடலங்களின் முகத்தோற்றங்களைப் புகைப்படம் எடுத்து பிரசுரமாக வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளை இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் 250 சடலங்களும், வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் 21 சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வெள்ளத்தில் மூழ்கிய ரயிலில் 500 பயணிகள் பரிதாப பலி!

## ஹிக்கடுவவில் சம்பவம்

(கொழும்பு)

தென்பகுதியில் கடற் கொந்தளிப்பின் போது ரயில் நீரில் அடித்துச் செல்லப்பட்டதால், சுமார் 500 பேர் பலியாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஹிக்கடுவ பகுதியில் ரயில் ஒன்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்த ரயிலில் 1000 பேர் பயணம் செய்ததாகத் தெரியவருகிறது.

உயரிழந்தவர்களின் உடல்கள் கிட்டபொல வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதேசமயம் இந்த அனர்த்தத்தால் ரயில் மற்றும் ரயில் பாதைகளுக்கு பத்துக் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# அமெரிக்க பிரஜைகளை வெளியேறுமாறு கோரிக்கை

கடற்கொந்தளிப்புக் காரணமாக இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளில் மரணமடைந்தவர்களுக்கு அமெரிக்க வெள்ளை மாளிகை ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது. அமெரிக்கா குறிப்பிட்ட நாட்டு அரசாங்கங்களுடனும், அங்கு கடமையாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பாரிய மனிதாபிமான உதவிகளை வழங்கும்.

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை, மாலைதீவு, தாய்லாந்தின் தென்கிழக்குப் பகுதி ஆகியவற்றுக்கு அமெரிக்கப் பிரஜைகள் எவரும் செல்லவேண்டாம் என எச்சரித்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், இந்த நாடுகளிலுள்ள அமெரிக்கப் பிரஜைகள் அனைவரையும் பாதுகாப்பாக வெளியேறிச் செல்லுமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

கடற்கொந்தளிப்பு காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு அமெரிக்க நாட்டவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# அவசர கால நிவாரணப் பணிகளில் தமிழர் தாயகப் பகுதிகள் புறக்கணிப்பு

## ஜோசப் பரராஜசிங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அவசர கால நிவாரணப்பணிகள் தொடர்பான விடயத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்கள் அரசாங்கத்தால் முற்றாகப் புறக்கணிக்கப்படுவதாக விசனம் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் உதவி வழங்கும் நாடுகளின் கவனத்துக்கு தமிழ்-முஸ்லிம் மக்கள் மீது காட்டப்படும் பாகுபாடு பற்றிய விடயத்தை எடுத்துச் செல்லப்போவதாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிவாரணப் பணிகள் தொடர்பாக பிரதமர் அலுவலகத்தில் கூடிக் கலந்தாலோசித்த போது, தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் கலந்து கொண்ட ஜோசப் பரராஜசிங்கம் இது குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

சுமார் இரண்டு மணிநேரமாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட அழிவுகள் பற்றிச் சிங்களக கட்சிப் பிரதிநிதிகளும், அரச சார்பானவர்களும் எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை, இது பற்றி நான் அவர்களிடம் கேள்வி எழுப்பிய பின்பே சுமார் ஐந்து நிமிடங்கள் இந்த விவகாரத்தை வேண்டா விருப்பாகக் கதைத்தார்கள்.

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள அழிவுகள், ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்கள் குறித்து அலட்சியமான போக்கைக் கடைபபிடிக்கும் அரசு மற்றும் சிங்களக் கட்சிகளின் நிலைப்பாட்டை சர்வதேச நிதிவழங்கும் நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு செல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணங்களே அதிகளவில் பாதிக்கப்பட்டன என்பதும், இங்கே தான் அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன இருந்தும் இந்தப் பகுதிகளுக்கு நிவாரண உதவிகள் சென்றடைவதில் அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை என கொழும்பு தமிழ்ச சமூகம் கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரத்தைப் புலம் பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகளினூடக இந்த நாடுகளின் கவனத்துக்குக் கொணடு வந்து, அரசுக்கு இராஜதந்திர ரீதியான அழுத்தத்தைப் பிரயோகிக்க வைக்க வேண்டுமெனவும் கோரியுள்ளது.

# திருமலைக்கு அனுப்பப்பட்ட பொருட்களை அபகரிக்க பேரினவாதக் குழு முயற்சி!

வவுனியாவிலிருந்து 4 லொறிகளில் திருகோணமலைக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை- ஹபரணைச் சந்தியில் வைத்துப் பேரினவதாக் குழுவொன்று பலாத்காரமாக இறக்கி, வேறு இடத்துக்கு அனுப்பிவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவலொன்று வெளியாகியுள்ளது.

ஹபரணைச் சந்தியில் நின்ற குழுவொன்று அங்கு நின்ற பொலிஸாரின் உதவியுடனேயே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இது பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு அறிவித்ததையடுத்து, அவர் இது தொடர்பாக ஹபரணை பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து நிவாரணப் பொருட்கள் பாதுகாப்பாக திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

# அவசரகால நிவாரணப் பணிகளில் புலிகளையும் இணைக்கவேண்டும்

## - தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை

அதிகாரத்தைப் பகிர்வதிலுள்ள பாகுபாடுகளைத் தற்போதைய அனர்த்தத்தில் அழிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் நிவாரணப் பணிகளில் காட்டக்கூடாது என கொழும்பைத் தளமாகக் கொண்ட தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

விடுதலைப் புலிகளை இந்த நிவாரணப் பணிகளில் முக்கிய பங்குதாரர்களாக்குவது தவிர்க்கப்பட முடியாதது இந்தப் பணிகளில் விடுதலைப்புலிகளையும் இணைத்து, ஈடுபடுத்துவதே நிவாரணப் பணிகள் முழுமை பெற உதவும்.

அதிகாரப் பகிர்வு மற்றும் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் இந்த விவகாரத்தில் களையப்பட்டு, அல்லலுறும் மக்களுக்கான உதவிகளை வழங்குவதே முதன்மைப்படுத்தப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பகுதிகள் போர் நடவடிக்கையில் பாதிக்கப்பட்டவை என்பதோடு, வறுமைக் கோட்டின் கீழான மககளைக் கொண்ட பிரதேசங்களாகவும் இருந்த காரணத்தால், இவ்வாறான பேரலையின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கான வசதிகளைக் குறைந்தளவில் கொண்ட பிரதேசங்களாகவே அவை இருந்தன.

இவ்வாறான நிலையில், இந்தப் பகுதிகளின் நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் பிரதான பங்காளிகளாக இணைக்க வேண்டும் என்றே சமாதானப் பேரவை நம்புவதாகவும், இந்த விவகாரத்தில் அரசும், விடுதலைப் புலிகளும் விட்டுக் கொடுப்புடன் செயற்படவேண்டிய சூழ்நிலையை இந்தப் பேரனர்த்தம் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளதோடு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகளுக்கு நிவாரணம் தேடுவதே முதற்பணியாக இருக்க வேண்டுமே தவிர, அதிகாரத்தை யார் வைத்திருக்கிறார்கள் என்பதல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேரழிவின் பின் முல்லைத்தீவு...


அழிந்துபோன வட்டுவாகல் பாலம்


சடலங்களைத் தேடும் மீட்புக்குழுவினர்



சிதைந்தழிந்த பாடசாலைகள்


இன்னும் வடியாத வெள்ளம்


முல்லை நகர அழிவின் ஒரு காட்சி


இப்படியும் ஒரு அழிவா?


கோலம் மாறிய நகர வீதி...

கொண்டது. இதன் கூட்ட எண்ணும், ஆவர்த்தன எண்ணும் ஒன்றே (ஒரே எண்) ஆகும்.

iv) குறித்த ஒரே கூட்டத்தில் அறை வெப்பநிலையில் திண்மம், திரவம், வாயு ஆகிய நிலைகளில் மூலகங்கள் காணப்படுகின்றன. இந்தக் கூட்டத்தை ✪ குறியினால் அடையாளமிடுக.

v) இந்த மூலகம் காணப்படும் கூட்டத்தில் Z என்ற இந்த மூலகத்தின் சல்பேற் தவிர, ஏனைய இந்தக் கூட்ட சல்பேற்றுக்கள் வீழ்படிவைத் தரும். நீரில் கரையாத சல்பேற்றுக்களாகும்.

vi) B என்ற இந்த மூலகம் முதல் வரிசை d தொகுப் புக்குரியது +1, +2 என்ற ஒட்சியேற்ற எண்களை மட்டும் காட்டும்.

vii) m என்ற இந்த மூலகம் 3 ஆம் ஆவர்த்தனத்தில் உளது. இது +7 என்ற ஒட்சியேற்ற எண்ணை காண் பிக்கக் கூடியது.

viii) △ என்ற இந்தக் கூட்டத்தினுள் இறுதி மூலகங்களின் குளோரைட்டுக் கரைசலிற்குள் $H_2O$ சேர்க்க வெள்ளை (பால்) நிறம் வெளிப்படும்.

ix) முதல் வரிசை d தொகுப்பிலுள்ள இந்த மூலகத்தின் உறுதியான அயனின் நீர்க்கரைசலின் நிறம் ஊதா ஆகவும், அமில ஊடகத்தில் இதன் நிறம் பச்சை ஆகவும் காணப்படும் இந்த மூலகம் Q என்க.

குறிப்பு 1) இவ் வினாக்கள் i - ix வரையில் குறிக்கப்பட்ட A,B,M,Q,R,X,Y,Z, △ , ✪ ஆகிய பத்து குறியீடுகளையும் பயன்படுத்தி அட்டவணையில் விடையளிக்கவும்.

குறிப்பு 2) ஒவ்வொரு சரியான குறியீட்டிற்கும் 3 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு பிழையான குறியீட்டிற்கும் 2 புள்ளிகள் கழிக்கப்படும். இந்தப்பகுதி (a) இற்கு அதிக குறைந்த புள்ளி 0 ஆகும்.

b) z என்ற இந்த மூலகம் முதல் வரிசை D - தொகுப் பிற்குரியது. இது இரண்டு ஒட்சியேற்ற எண்களை தோற் றுவிக்கக் கூடியது. இது குறிப்பிட்ட ஒரு ஒட்சியேற்ற நிலை யல் அதன் நீர்க்கரைசல் மஞ்சள் (மஞ்சள், கபில) நிற மாகவும், மற்றைய ஒட்சியேற்ற எண் நிலையில் இதன் நீர்க் கரைசல் பச்சை நிறமாகவும் காணப்படும்.

i) மூலகம் Z ஐ இனம் காண்க?.................................

ii) மேற்படி நிறங்களிற்குரிய ஒட்சியேற்ற எண் நிலை களைக் குறிப்பிடுக?

பச்சை.............................................

மஞ்சள் (மஞ்சள் கபில)......................

iii) Z இன் $e^n$ நிலையமைப்பை எழுதுக?

..............................................................

iv) Z இன் குறிப்பிட்ட இந்த அயன் நிலைகளை வேறு படுத்தக் கூடிய இரண்டு பரிசோதனைகளையும், அவ தானங்களையும் பினவரும் அட்டவணை மூலம் பூர்த்த செய்ய வேண்டியுள்ளது.

| | பரிசோதனை | Z ன் அயன் கரைசல் நிலை I ☐ | நிலை II ☐ |
|---|---|---|---|
| 1) | தனித்தனியாக $H^+/MnO_4(aq)$ சேர்த்தல் | a) | b) |
| 2) | தனித்தனியாக NaOH கரைசல் சேர்த்தல் | c) | d) |

(a,b,c இல் அவதானங்களைக் குறிப்பிடுக)

(C) i) $[Fe(H_2O)_6][Fe(CN)_6]$ இன் IUPAC பெயரை எழுதுக.

..............................................................

ii) Pentam mine chlorocobalt

iii) chloride இன் சூத்திரத்தை எழுதுக. ................

3. (a) i) சுத்தமாக்கப்பட்ட........ஐ....................ல் திருத்தமாக நிறுத்து அதில் .......... கிராம் சோடியம் ஐத ரொட்சைட்டையும் திருத்தமாக நிறுத்தெடுத்து ........$cm^3$ நீர்க்கரைசல் ஆக்குவதன் மூலம் ஆய்வு கூடத்தில் 0.5 $mol\ dm^{-3}$ செறிவுடைய 250 $cm^3$ உரிசோடா கரைசல் தயாரிக் கப்பட்டது. பின் தரப்பட்ட HCl அமிலக் கரைசல் ஒன்றை வலுப் பார்ப்பதற்கு இந்த தயாரிக்கப்பட்ட கரைசல் பயன்படுத்தப் பட்டது. இதற்காக ......................., ...................... எனபன சுத்தமான நீரினால் கழுவியபினப் அளவ,.............. என்பன அவற்றுள்.................... கரைசல்களினாலும் கழுவப்பட்டன. ...................... உதவியானால் .........க்குள் 10$cm^3$ அந்த காரக் கரைசல் சேர்க்கப்பட்டது. இதற்குள் இரண்டு துளிகள் பினோப்தலின் காட்டி சேர்த்த போது கரைசல்.........நிறமாக மாறியது. தரப்பட்ட அமிலக் கரைசல்................. உதவியின் மூலம்................ ....ல் திருத்தமாக எடுக்கப்பட்டது. இந்த அமிலக் கரைசலை நியமிப்புக் குடுவையினுள் சிறிது சிறிதாக சேர்த்தபோது கரைசல் ......... ஆக மாறியது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மூன்று வாசிப்புக்கள் 10.20 $cm^3$, 9.80$cm^3$, 10.00$cm^3$ ஆக பெறப்பட்டது. எனவே இந்த HCL அமில செறிவு.......... $molm^{-3}$ ஆகும்.

ii) $CU^{2+}$ இன் நீர்க்கரைசலின் நிறம்.......... ஆகும். இதற்குள் மிகை செறி $NH_3$ கரைசல் சேர்த்த போது..................... நிறம் பெறப்படும். பின் மிகை செறி HCL (aq) சேர்க்கும் போது.......... நிறம் பெறப் படும்.

*மேற்படி வெற்றிடங்களையும் சொல் / எண் என்பவற்றைப் பயன்படுத்தி நிரப்புக.*

b) $KLO_3 + HCL + KL \longrightarrow KCL + H_2O$ எனும் தாக்கத்தைக் கருதுக.

i) அமில ஊடகத்தில் $IO_3^-$ ஆனது $I_2$ ஆக மாறுவதற்குரிய அயன் அரை சமன்பாட்டை எழுதுக. ....................

ii) $I^-$ ஆனது $I_2$ ஆக மாறுவதற்குரிய சமன்பாட்டை எழுதுக. ..............................

iii) மேற்படித் தாக்கங்கள் சமன்படுத்தப்பட்ட நிகர சமன பாட்டை எழுதுக...............................

iv) இதன் மூலம் 254 கிராம் $I_2$ பெறுவதற்கு தேவைப்படும் $KLO_3$ இன் திணிவைக் கணிக்குக (K=39, O=16,I=127)

c) தரப்பட்ட சேர்வை L இன் அனுபவ சூத்திரம் $C_3H_6O$ ஆகும். இச் சேர்வையின் சார் மூலக்கூற்றுத் திணிவு $C_4H_{10}$ இன மூலக்கூற்றுத் திணிவுக்கு சமன் எனின், சேர்வை L இன் மூலக் கூற்றுச் சூத்திரத்தைத் துணிக. (C=12, H=1, O=16).

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2005

**சரியான விடையின் கீழே கோடிடுக.**

1) மருத்துவச் செடி எனக் கருதப்படுவது
   1) தென்னை 2) கத்தரி
   3) மிளகாய் 4) குப்பைமேனி

2) எண்ணெய் வடிக்கப் பயன்படும் வித்துக்களில் ஒன்று
   1) இலுப்பை 2) நெல் 3) சோளம் 4) மா

3) வெடித்துச் சிதறிப் பரவும் வித்துக்களில் ஒன்று
   1) வேம்பு 2) வெண்டி 3) பலா 4) முந்திரிகை

4) முட்களைக் கொண்டிருக்கும் தாவரங்களில் ஒன்று
   1) வெண்டி 2) குருவிச்சை 3) றோசா 4) கற்றாளை

5) ஓடிய பையனை மயூரன் கண்டான். இங்குள்ள பெயரெச்சம்
   1) பையன் 2) ஓடிய 3) மயூரன் 4) கண்டான்

6) வாக்கியம் முடிவில் இடப்படும் குறியீடு
   1) . 2) ? 3) ! 4) ,

7) கணவனை இழந்த பெண்
   1) காதலி 2) மனைவி 3) கைம்பெண் 4) குமரி

8) முதல் ஏழு சதுர எண்களில் நடுவில் வரும் எண்
   1) 25 2) 36 3) 9 4) 16

9) இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் காட்டுகிறது



   1) வாகனங்கள் தரித்து நிற்றல்
   2) பஸ் தரிப்பிடம்
   3) நேரே செல்லுதல்
   4) வாகனங்களை நிறுத்துதல் கூடாது

10) இவ்வமைப்பு எதனைக் காட்டுகிறது?



   1) காற்றுத் திசைகாட்டி 2) வெப்பமானி
   3) மழைமானி 4) அமுக்கமானி

11) ஒவ்வொரு உருவிலும் காணப்படும் விளையாட்டு ஆக்கத்தின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களில் இருந்து தெரிந்து எழுதுக.



1) ......... 2)......... 3) ......... 4) .........

(இரட்டைத்தோணி, புல்லாங்குழல், துணிதூக்கி, பம்பரம், உருளும் வண்டி, சீனப்பட்டம், நாதஸ்வரம், புல்லாங்குழல், வெப்பமானி, மழைமானி)

12) பின்வரும் மின்குமிழைப் பயன்படுத்தி, இரண்டு மின்கலங் களையும் தொடர் நிலையில் இணைத்து நான்கு கம்பித் துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் வரிப் படத்தில் வரைந்து காட்டுக



13) பின்வரும் உபகரணங்கள் எக்கைத்தொழில்களுக்குப் பயன் படுத்தப்படுகின்றன?
   1) களிமண் 2) சீவுளி
   3) தூக்கு குண்டு 4) நாற்று நடுதல்

14) பின்வரும் பாடலிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக

அருமை மிக்க ..................................
கடிதம் எழுதவே
.............................. வெள்ளைத் தாளை
எடுத்துக் ..............................................
அன்புமிக்க .............................................
என்று தொடங்குவே
அச்சடித்த ............................... போல
அழகாய் எழுதுவேன்

15) மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

i) சல சல என்பது
   1) இரட்டை மொழி 2) இணை மொழி
   3) அடுக்கு மொழி 4) மரபுத்தொடர்

ii) மனிதனால் கூட அமைக்க முடியாத கூட்டை அமைக்கும் பறவை
   1) தூக்கணாங்குருவி 2) காகம்
   3) குயில் 4) கிளி

iii) புற்றுக்களை வாழ்விடமாகக் கொண்டது
   1) ஆடு 2) வௌவால் 3) உடும்பு 4) ஆமை

vi) குஞ்சு பொரிக்கும் விலங்கு
   1) அணில் 2) நாய் 3) பூனை 4) ஆடு

v) நமது நாட்டின் தேசியப் பறவை
   1) அன்னம் 2) புறா 3) மயில் 4) காட்டுக்கோழி

vi) நீரினுள் வாழும் பிராணி
   1) தவளை 2) தாரா 3) திமிங்கலம் 4) நாரை

vii) டெங்குக் காய்ச்சல் நோயைப் பரப்பும் நுளம்பு முட்டையிடுவது
   1) தூய நீர் 2) அழுக்கு நீர்
   3) உப்பு நீர் 4) நன்னீர்

viii) மாமிச உணவு உண்ணும் பறவை எது?
   1) கிளி 2) அன்னம் 3) பருந்து 4) புறா

ix) பறவைகள் பறப்பதற்கு உதவுவன
   1) சிறகுகள் 2) கால்கள்
   3) அலகுகள் 4) விண்ணிகள்

x) தவளை முட்டையின் நிறம்?
   1) வெள்ளை 2) மஞ்சள் 3) பச்சை 4) கபிலம்

16) தரப்பட்டுள்ள உருக்களுக்குரிய பெயர்களைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



1) ......... 2) .......... 3) .......... 4) ..........

17) ஒரு கடையில் ஆறு நாட்களில் விற்பனை செய்யப்பட்ட குடைகளின் எண்ணிக்கை தொடர்பான சலாகை வரைபு தரப்பட்டுள்ளது.




i) செவ்வாய்க் கிழமை விற்ற குடைகளின் எண்ணிக்கை யாது? ................

ii) சமமான குடைகள் உற்பத்தி செய்யப்படும் நாட்கள் எவை? ...............

iii) சனிக்கிழமை 80 குடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அதனை வரைபில் காட்டுக.

iv) திங்கள் முதல், வெள்ளி வரை உற்பத்தி செய்யப்பட்ட குடைகளின் எண்ணிக்கை யாது? ...............

v) ஒரு குடையின் விலை ரூபா. 100 எனின், புதன்கிழமை உற்பத்தி செய்யப்பட்ட குடையின் பெறுமதி யாது? ..........................................

vi) நான் இரண்டு குடைகளை வாங்கிக் கொண்டு ரூபா. 500 கொடுத்தேன். எனக்கு கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? ........................

vii) 1 டசின் குடை வாங்கிய வியாபாரி, மயூரன் கொடுத்த பணம் எவ்வளவு? ........................

viii) லாவண்யாவிடம் 750/= ரூபா உள்ளது. 8 குடைகள் வாங்க இன்னும் எவ்வளவு பணம் தேவை?

18) பின்வரும் கதையை ஏழு வாக்கியங்களில் பூர்த்தி செய்க. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாது பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் எழுதுக.

*நான் எனது அறையில் இருந்து படித்துக் கொண்டு இருந்தேன். அப்பொழுது நேரம் இரவு 8.30 மணி. பாம்பொன்று சத்தமின்றி மெதுவாக உள்ளே வந்தது. அதன் உடம்பில் வெள்ளைப் புள்ளிகள் காணப்பட்டன.*

19) அழகிய வண்ணத்துப் பூச்சி இனிமையான தேனை உறிஞ்சிக் குடித்தது.

i) இதில் உள்ள எழுவாய் அடைமொழி
1. இனிமையான 2. தேனை
3. குடித்தது 4. அழகிய

ii) மேலே உள்ள வசனத்தில் பயனிலை அடைமொழி யாது?
1. குடித்து 2. தேனை
3. உறிஞ்சி 4. அழகிய

iii) சங்கீதா இனிமையாகப் பாடினாள். இதில் உள்ள வினைச்சொல் யாது?
1. சங்கீதா 2. பாடினாள் 3. இனிமையாக

20) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கீறிடுக.

i) 1. ஈற்கு 2. ஈர்க்கு 3. ஈக்கு 4. ஈறுர்கு

ii) 1. சவர்க்காரம் 2. சவுக்காரம்
3. சவர்காரம் 4. சவுற்காரம்

21) சரியான விடையின் கீழ் கோடிடுக.

i) கண்ணில்லாத நிலத்தின் கீழ் வாழும் விலங்கு
1. பூச்சி 2. மண்புழு 3. அட்டை 4. வண்டு

ii) வயலில் அருவி வெட்டுவதற்குப் பயன்படும் கருவி
1. முள்ளுக்கத்தி 2. அரிவாள்
3. கத்தி 4. கலப்பை

iii) இலங்கையின் இயற்கைத்துறைமுகம்.
1. காலி 2. கொழும்பு 3. திருகோணமலை 4. அநுராதபுரம்

iv) மின்னைக் கடத்தும் கொருட்களில் ஒன்று.
1. இறப்பர் 2. கண்ணாடி 3. பலகை 4. செப்பு

v) இலங்கையின் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம் யாது?
1. கொழும்பு 2. களுத்துறை
3. யாழ்ப்பாணம் 4. கண்டி

vi)




இவ்வுருவின்படி C யின் பரப்பளவு Bயின் பரப்பளவைப்போல் எத்தனை மடங்கு
1. 7 மடங்கு 2. 6 மடங்கு
3. 4 மடங்கு 4. 3 மடங்கு

22) பொருத்தமான விடையினை எழுதுக.

i)




இவ்வுரு காட்டும் செவ்வகத்தின் நீளம் அகலத்தைப் போல் இரு மடங்காகும். அதன்படி செவ்வகத்தின் அகலம் யாது?

ii)



இவ்வுருவின் நிழற்றிய பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்.
1. 5/7 2. 2/7 3. 2/3 4. 2/8

23) பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான விடை இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

i) உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவில் செல்லப் பயன்படும் சாதனம் எது?
1. படி 2. மின்உயர்த்தி 3. கப்பி 4. கம்பி

ii) சைக்கிள் விளக்கிற்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?
1. தைனமோ 2. மின்சுருள் 3. மின்உயர்த்தி

iii) மனிதனுக்கு இருகைகள் உண்டு. கை கொடுத்தல் என்பது -
1. வழிசெய்தல் 2. வரவேற்றல்
3. உதவிசெய்தல் 4. கை குலுக்கல்

iv) தாவரத்திற்கு வித்துப்போல பறவைக்கு
1. குஞ்சு 2. முட்டை 3. கூடு 4. குட்டி

★இலக்கம் 24 - 25 வரையுள்ள படங்களில் ஒன்று வித்தியாசமானது. அதனைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

24)




25)






# க.பொ.த (உ/த) இரசாயனவியல்

ஆசிரியர்:
ஏ.லோகநாதன் B.Sc, Dip.in Ed.

## அமைப்புக் கட்டுரைகள் II A

1. (a) X,Y,Z என்பன ஆவர்த்தன அட்டவணையின் ஒரே ஆவர்த்தனத்தில் அடுத்துள்ள மூன்று தாண்டலில்லா மூலகங்களாகும். எனினும் இவை அணுஎண் ஏற்றுவரிசையில் தரப்படவில்லை. இவற்றின்
முதலாம் அயனாக்கற் சக்தி X<Y<Z ஆகவும்,
மின்னெதிர்த்தன்மை X<Y<Z ஆகவும்,
காணப்படுவதுடன், X இன் ஐதரைட்டு அரைவெப்பநிலையில் வாயு நிலை காணப்படுகிறது.

i) மூலகங்கள் X,Y,Z ஐ இனம் காண்க?
X = ...........................................
Y = ...........................................
Z = ...........................................

ii) Y இன் முதலாம் அயனாக்கற் சக்தியை விட, Z இன் முதலாம் அயனாக்கற் சக்தி உயர்வாக இருப்பதற்குரிய காரணம் என்ன?
...........................................
...........................................
...........................................
...........................................

iii) X, Y, Z இல் பிற திருப்பங்களாகக் காணப்படுவது எது? அல்லது எவை?

iv) X இன் பிறதிருப்பங்கள் எத்தனை உண்டு? அவை எவை?

v) Z இன் ஏதாவது ஒட்சைட்டுக்கள் மூன்றின் சூத்திரங்களை எழுதுக. அவை மூலம்/ அமிலம்/ நடுநிலை என்பதையும் குறிப்பிடுக. ( Z இன் உண்மைக் குறியீட்டைப் பயன்படுத்துக)

| Z இன் ஒட்சைட்டு | வகை |
|---|---|
| 1. ........................ | ........................ |
| 2. ........................ | ........................ |
| 3. ........................ | ........................ |

(b) உரு I இல் வரையப்பட்ட அமைப்பு H - நிறமாலையின் லைமன் தொடரில் உள்ள அடுத்துள்ள மூன்று X,Y,Z கோடுகள் என்க.

உரு I



(i) இந்த X,Y,Z கோடுகள் பின்வரும் உரு II இல் R இன் எந்த இலக்கத்துக்குரிய பாய்ச்சலின் போது தோன்றியிருக்கும் என்பதை உரு II - இல் தெளிவாக வரைந்து X,Y,Z என்பவற்றையும் அதில் குறிப்பிடுக.

உரு - II




(ii) பாமர் தொடரில் அவதானிக்கப்படும் சிவப்புநிறக்கோடு, ஊதாநிறக்கோடு என்பன உரு II இல் உள்ள n இன் எந்தெந்த படிகளுக்குரிய $e^-$ பாய்ச்சலினால் (கதிர்பினால்) தோன்றும் என்பதை உரு II இல் வரைந்து காட்டுக.
சிவப்பு நிறக் கோட்டிற்குரிய $e^-$ பாச்சலை R இனாலும், ஊதா நிறக் கோட்டிற்குரிய $e^-$ பாச்சலை V இனாலும் குறிப்பிடுக.
மு.கு:- R,V கோடுகளை வரையும் போது, அவற்றின் அலை நீளங்களை X,Y,Z உடன் கவனத்தில் கொள்ளவும்.

(iii) பின்வரும் வெற்றிடங்களைப் பூர்த்தியாக்குக.
X,Y,Z கோடுகளின் அலை நீளம் R கோட்டின் அலை நீளத்தை விட............... இருக்கும்.
கோடு R இன் சக்தியை விட கோடு X இன் சக்தி ......... இருக்கும். (இங்கு கூடுதல், குறைவு) என்பவற்றில் ஒன்றைப் பயன்படுத்துக.

(c) அணுக்களின் வலுவளவு $e^-$ களைக் காட்டுவதற்கு புள்ளி, புள்ளடி வடிவங்களைப் பயன்படுத்தி பின் வருவனவற்றின் கட்டமைப்புக்களைத் தருக.

| $O_3$ | $H_2SO_4$ |
|---|---|
| | |

2. a) குறிப்புகள் 1,2 ஐ தெளிவாக வாசிக்கவும்



(a) இந்தப் பகுதி (2-a) இற்கு விடையளிப்பதற்கு தரப்பட்ட அட்டவணையையும், பின்வரும் தரவுகளையும் பயன் படுத்துக.

i) X,Y என்பன ஒரே கூட்டத்தின் நைத்திரேற்றுக்களாகும். y இன் நைத்திரேற்று வெப்பப் பிரிகையின் போது, ஒரே ஒரு வாயுவையும் X இன் நைதிரேற்று வெப்ப நைதிரேற்று வாயுவையும் விளைவாக்குகின்றது.

ii) இதன் மூலக்கூற்றில் 8 அணுக்கள் காணப்படும் இந்த மூலகம் A என்க.

iii) R என்ற இந்த மூலகம் +3 ஒட்சியேற்ற என் மட்டும்

இங்கே மடிக்கவும்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 3650 குடும்பங்கள் இடம் பெயர்வு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்சீற்றம் கொண்டதால் ஒட்டு சுட்டான், முள்ளியவளை, புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் சுமார் 3650 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாகத் தங்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், இரணைப்பாலை மகாவித்தியாலயம், மற்றும் பொது இடங்களில் 1800 குடும்பங்களும், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியிலும், கலைமகள் பாடசாலையிலும், முள்ளியவளை தமிழ்க் கலவன் பாடசாலையிலும், பொது இடங்களிலும் 2200 குடும்பங்களும், ஒட்டுசுட்டான் பகுதியல் 170 குடும்பங்களும், குமுழமுனை கமநல சேவைத் திணைக்களத்திலும், குமுழமுனை மகாவித்தியாலத்திலும் 450 குடும்பங்களும் தற்போது தற்காலிகமாகத் தங்கியுள்ளனர். இவர்களுக்கு வர்த்தகர்கள், பொது அமைபுக்கள், விடுதலைப் புலிகள், புனர்வாழ்வுக் கழகம் என்பன அடிப்படை உதவிகளை வழங்கி வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடலின் சீற்றத்தால் மாத்தளன், அம்பலவன்பொக்கணை, இரணைப்பாலையின் ஒருபகுதி, செல்வபுரம், சின்னத்தன்காடு, கள்ளப்பாடு, அலம்பில், செம்மலை, சுண்டிக்குளம், நாயாறு போன்ற பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

# உயிரிழந்த மக்களுக்காக துக்கதினம் அனுஷ்டிப்பு

(புங்குடுதீவு)

வடகிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேரனர்த்தத்தின்போது உயிரிழந்த மக்களுக்கு புங்குடுதீவில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம், வடமராட்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வன்னி ஆகிய பகுதிகளில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டுவருகிறது.

புஙகுடுதீவிலுள்ள வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிட்டும், ஒலிபெருக்கி மூலம் சோக கீதம் இசைத்தும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

யாழ்.மாவட்ட தென்னிந்தியத் திருச்சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

# உலர் உணவுப் பொருட்களை தந்துதவுமாறு கோரிக்கை!

(வடமராட்சி)

கடற்கொந்தளிப்பால் பாதிப்புற்று, வடமராட்சிக்கு இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பண்டங்கள், உடை, சிறுவர்களுக்கான பால்மா வகைகள், பாய், தலையணை, மிகவும் அவசரமாகத் தேவைப்படுகிறது.

எனவே, சமைத்த உணவைத் தவிர்த்து, மேற்படி பொருட்களை அனுப்பிவைக்குமாறு யாழ்மாவட்ட அரசியற் துறையினர் கேட்டுள்ளனர்.

# கல்வியியற் கல்லூரிகளுக்கான நேர்முகத் தேர்வு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடநெறிகளை ஆங்கிலமொழிமூலம் பயில விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலேயே நடைபெறும்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும். தென்பகுதிக் கல்வியியற் கல்லூரிகளில் மேற்படி நெறி இரண்டுக்கும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் அங்கு செல்லத் தேவையில்லை. அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேற்படி கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலமொழி மூலம் பயில விண்ணப்பித்து, நேர்முகப்பரீட்சைக் கடிதம் கிடைத்தவர்கள் மட்டும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அலுவலகத்துடன் உடன்தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வணிகர் கழகம் ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ் வணிகர்கழகம் மேற்கொண்டுவருகிறது.

இதற்காக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் நிவாரணப் பொருட்களை வணிகர் கழகம் அவசர அவசரமாகச் சேகரித்து வருகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய விரும்புவோர் - இலக்கம் 165, மானிப்பாய் வீதியில் உள்ள வணிகர் கழகப் பணிமனையில் நிவாரணப் பொருட்களை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### பிரதேச செயலக பிரிவு ரீதியாக சனசமூக நிலையங்கள்

பிரான்ஸ் நாட்டின் தூதுவராலயத்தின் நிதியுதவியுடன், கியூடெக் நிறுவனத்தால் பிரதேச செயலகங்கள் ரீதியாக சனசமூக நிலையங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், சங்கானை, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 4 லட்சம் ரூபா செலவில், 14 சனசமூக நிலையங்கள் புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

14 சனசமூக நிலையங்களின் பாலர் பாடசாலைகளுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதாக கியூடெக் நிறுவன இயக்குனர் சி.ஜீ.ஜெயக்குமார் தெரிவித்தார். (91)

# சங்கானைப் பகுதியிலும் பொருட்கள் சேகரிப்பு!

(சங்கானை)

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காகச் சங்கானைப் பகுதியில் பொது அமைப்புக்கள் - உணவுப் பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

சங்கானை மாவடி இளைஞர் மன்றத்தால் 500 சாப்பாட்டு பார்சல்களும், பாய், தலையணை, பிஸ்கட் வகைகள், பால்மா வகைகள், மருந்துப் பொருட்கள் என சேகரிக்கப்பட்டு, வலிகாமம் மேற்கு அரசியற்துறையினர் ஊடாக நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை சங்கானை வர்த்தக சங்கம் மற்றும் சனசமூக நிலையங்களும் உடனடி நிவாரணப் பொருட்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இதற்கென ஒலி பெருக்கி மூலம் அறிவித்தல் கொடுத்து, தமது பணியில் தீவிர அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர். (48)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் இனங்காணப்பட்ட சடலங்கள்!

(கிளிநொச்சி)

கடற்கொந்தளிப்பால் உயிரிழந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு -

சே.துர்க்காதேவி, சே.வேந்திராணி, ம.சின்னம்மா, ம.பார்வதிப்பிள்ளை, நல்லதம்பிப்பிள்ளை, ப.செல்வம், கு.கமலாதேவி, க.வர்திராஜன், செ.செல்வராகவன், அ.கௌதினி, ஜெ.நேசமலர், ஜெ.ஜெனோஸ், ஜெ.ஜெனுசாள்ஸ், வ.அனுசா, வ.கணபதிப்பிள்ளை, க.செல்லம்மா, ச.ரஜிதா, ச.தனுசியா, ச.செல்வராணி, க.லீலா, ச.சகிதா, சுலச்சனா, மதுசா, தீபா, நேசம், கவிதா, அ.லாவண்யா, ர.யூடிதன், ர.றுனோத், வே.ஜோன்லேற், வ.துசியந்தினி, தெய்வமனோகரி, இ.சிவப்பிரகாசம், தி.திரவியம், வி.சுலோசினி, வி.வியந்தன், ப.பத்மினி, ப.ரதிபா, ப.லதிபா, ச.புவனேஸ்வரி, ச.சத்தியகுமாரி,, த.சற்குணேஸ்வரன், தி.யோகராணி, ச.லக்ஷ்சிகா, ச.திபிகா, க.ஆச்சி, ஆ.நிர்மலாதேவி

### மன்னாரில் மக்கள் இடம்பெயர்வு

வடக்கு - கிழக்கை கடுமையாகத் தாக்கிய கடலின் சீற்றம் மீண்டும் ஒருமுறை ஏற்படும் அபாயம் தென்படுவதால், மன்னாரில் உள்ள 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இவர்கள் வவுனியா மடுத் தேவாலயம் போன்ற பகுதிகளுக்கு பாதுகாப்புத்தேடிச் செல்கின்றனர். இதன் காரணத்தால் நேற்று முன்தினம் மாலை மன்னார் நகரம் வெறிச சோடிக்காணப்பட்டது.

# உதவி வழங்குமாறு கோரிக்கை

பாதிப்புக்குள்ளான குடாநாட்டு கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள், அங்கத்தவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்குக் கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தும் தங்களாலான மனிதாபிமான உதவிகளைச் செய்யக் கடமைப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கூறியுள்ளன.

இந்த நிலையில் இயற்கை அனர்த்தம் காரணமாகத் தமது வீடுகளையும், உடமைகளையும், குடும்ப உறவுகளையும் இழந்து நிர்க்கதிக்குத் தள்ளப்பட்டுப் பரிதவிக்கும் எமது உறவுகளுக்கு உதவும் பொருட்டு, உதவிகள் கேட்டுவரும் தொண்டு நிறுவனங்களுக்குத் தம்மாலான உதவிகளை வழங்குவதுடன், பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நேரடியாக உதவி செய்யவிரும்பும் கூட்டுறவு நிறுவனங்கள் உதவிப் பொருட்களைச் சேகரித்து வழங்குமாறும் யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை கேட்டுள்ளது.

# உதவிப் பொருட்களைத் திரட்டுவதில் சமுர்த்தி செயலகமும் தீவிரம்!

வடமராட்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய உதவிப்பொருட்கள் என்பன யாழ். பிரதேச செலயக சமுர்த்தி உத்தியோகத்தர்களால் திரட்டப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

இது குறித்து யாழ். பிரதேச சமுர்த்தி முகாமையாளர் கருத்து தெரிவிக்கையில் -

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்குவதில் மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டுவதாகவும், குருநகர், பாசையூர் போன்ற இடங்களில் இளைஞர்கள் தாமாகவே முன்வந்து உதவிப் பொருட்களைத் திரட்டி, ஒத்துழைப்பு வழங்கியதாகவும் தெரிவித்தார்.

இவை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மற்றும் வரணி மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்கியிருந்த மக்களுக்கு உணவுப் பொருட்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டன. அடுத்த கட்டமாக இவர்களுக்கான மருந்துப் பொருட்களைத் திரட்டி வழங்கவுள்ளதாகவும் சமுர்த்தி முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

# உதவிப் பொருட்களைத் திரட்ட செயலகத்தில் விசேட கருமபீடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருட்களைத் திரட்டுவதில் யாழ்.செயலகம் ஈடுபட்டு வருகிறது.

இதற்காக யாழ். செயலகக் கட்டட வாயிலில் உதவிப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான கருமபீடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவுப் பொருட்கள் மற்றும் உதவிப் பொருட்களை இங்கே மக்கள் வழங்கமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலேயே பெருமளவு மக்கள் வருகைதந்து பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிப் பொருட்களை வழங்கியதைக் காணமுடிந்தது.

### உதவுவோர் தொடர்புகொள்ளவும்

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக நெல்லியடி தேசிய எழுச்சிப் பேரவையால், விசேட கருமபீடமொன்று நெல்லியடியில் அமைக்கப்பட்டுள்ளது. உதவுவோரைத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஐ.பூரணி
முகவரி :சுன்னாகம்



வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :-------------------------
முகவரி :-------------------------
பிறந்த ஆண்டு:-------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


# நலன்புரி நிலையங்களின் தேவைகளை நிறைவேற்றுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் தென்மராட்சி பிரதேச செயலர் - யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கூரை விரிப்புக்கள் 25, பாய்கள் 1042, சாரம் 450, சேட் 450, குழந்தைகளுக்கான பால்மா வகைகள் 150, படுக்கை விரிப்புக்கள் 525, சாப்பாட்டுக் கோப்பைகள் 500 என்பன கோரப்பட்டுள்ளன.

அத்துடன் இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணிய வித்தியாலயம், கிறிஸ்தவ தேவாலயம், வரணி மகாவித்தியாலயம் என்பவற்றில் தலா 5 தற்காலிக மலசலகூடங்கள் அமைப்பதற்கும், மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நிரம்பியுள்ள மலசலகூடக்குழியைத் துப்புரவு செய்வதற்கும் ஒழுங்கு செய்து தருமாறும் பிரதேச செயலர் கோரியுள்ளார். (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

### கூட்டம் ஒத்திவைப்பு

துரித அபிவிருத்தி - 2005 தொடர்பாக, ப.நோ.கூ.சங்கங்களுடன் நடைபெறவிருந்த கலந்துரையாடல், தற்போது ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளில் அனைவரும் ஈடுபட்டுள்ளதால், மறு அறிவித்தல் வரும்வரை நடைபெறமாட்டாதென யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் அறிவித்துள்ளார்.

### பற்சிகிச்சை நிலையம் திறப்பு

சாவகச்சேரி வைத்தியசாலையில் கட்டப்பட்ட பற்சிகிச்சை நிலையம் - டொக்டர் கா.சிவபாதத்தால் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

இதில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டொக்டர் அம்பிகைபாகன், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் டொக்டர் டேவிட் மற்றும் மாவட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

- மாசிலான்

# கொண்டாட்டங்களைக் கைவிடுவோம் துயர்துடைக்கக் கைகொடுப்போம்

இயற்கையின் சீற்றம் ஏற்படுத்திய பேரழிவு கோடிக்கணக்கான ரூபா இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் பறிக்கப்பட்ட மனித உயிர்களின் பெறுமதி எவராலுமே மதிப்பிட முடியாதது. இந்தப் பேரழிவுகளை மிகச் சுலபமாக ஈடுசெய்ய முடியாது. தென்கிழக்காசிய நாடுகளின் கரையோரங்கள் பெரிதாகப் பாதிப்படைந்துள்ளன. ஆனால் தமிழ் மக்களுக்குத்தான் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தீவின் பெரும்பாலான கரையோரம் இந்தக் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்பேசும் மக்களும், சிங்கள மக்களும் அவலங்களைச் சந்தித்துள்ளனர். காலி, மாத்தறை, களுத்துறை, அம்பலாம்கொடை என்று தீவின் தென்பகுதியில் சிங்கள மககளும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ்பேசும் மக்களும் பாதிககப்பட்டுள்ளனர். மொத்தத்தில் பார்த்தால் தமிழ்பேசும் மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இராணுவ ஆக்கிரமிப்பால் சொத்துச் சுகங்களை இழந்த மக்கள் சமாதான உடன்படிக்கையின் பின்னர் சற்று மூச்சுவிட்டவேளையில், வெள்ளம் வந்து வாட்டியது. வெள்ள அனர்த்தத்துக்கு அரசு போதிய உதவிகள் செய்யாது இருந்துவிட்டது. தனியார் நிறுவனங்களே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பகுதி மக்களுக்குப் பெரிய உதவிகளைச் செய்தனர். இவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது இயல்பு வாழ்க்கையைத் தொடங்க முன்னர் வந்ததே இந்தப் பேரழிவு. இதைப் போன்ற கொடுமை வேறு எங்காவது நடந்ததுண்டா? என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

இந்தப் பேரழிவால் எவ்வளவு கொடுமை ஏற்பட்டுள்ளது. பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பறிக்கப்பட்டுள்ளது. இறந்தவாகளில் பெருமளவிலானோர் பெண்களும், குழந்தைகளுமே என்று அறிக்கைகள் கூறுகின்றன. இதை எத்தனை பேர் குடும்பத் தலைவனை இழந்துள்ளனர். உழைத்துக் காப்பாற்றும் ஆண் பிள்ளைகளை இழந்துள்ளனர். தாய், தகப்பனை இழந்து போய்ப் பரிதவிக்கும் பிள்ளைகள் எத்தனை பேர்? இவர்களின் எதிர்காலம் தான் என்ன? எப்படி இவர்களது வாழ்க்கை தொடங்கப் போகின்றது? என்பன பெரிய கேள்விக் குறிகளாகவே உள்ளன.

கரையோரங்களில் இனித் தொடர்ந்தும் வாழ முடியுமா? குடியிருந்த வீடுகள் எல்லாம் அழிந்துவிட்டன. உடுத்த உடுப்பைத் தவிர அவர்களிடம் வேறு எதுவுமே இல்லாத நிலை. குடும்பத் தலைவனோ? உழைப்பாளியோ இல்லாநிலை. இவர்களால் சிறு குடிசைகூடக் கட்ட முடியுமா? முடியாது. வீடு இருந்த இடமே தெரியாமல் அழிந்து போயுள்ளது. இவ்வாறுள்ள நிலையில் குடியிருந்தாலும், குடிநீருக்கு எங்கு போவார்கள். கடற்கரை ஓரங்களில் மிகச் சில கிணறுகளே அங்கொன்றும், இங்கொன்றுமாக நல்ல தண்ணீர் உள்ளனவாக இருக்கும் ஆனால் கடற்கொந்தளிப்பால் அவையாவும் உபபு நீராக மாறியிருக்கும். எனவே அந்த மக்களின் அடிப்படைத்தேவை எவ்வாறு நிறைவேற்றப்பட முடியும். பாரிய ஒரு நெருக்கடியை மக்கள் எதிர்கொள்ளப் போகின்றனர்.

லண்டனில் தங்கியிருந்த ஜனாதிபதி இந்த அழிவை 'தேசிய அனர்த்தம்' என்று அறிவித்துவிட்டு, நேற்றுமுன்தினமே நாடு திரும்பியுள்ளார். இதர நாட்டுத் தலைவர்கள் ஏதாவது மாநாடு போன்ற நிகழ்வுகளுக்காக வெளிநாடு சென்றால் கூட, அதில் பங்குபற்றாது உடனடியாக நாடு திரும்புவார்கள். ஏதாவது உரையாற்ற வேண்டி இருந்தால் கூட, அளவு எழுதிக் கொடுத்துவிட்டு உரையாற்றாமல் திரும்பி விடுவார்கள். ஆனால் சந்திரிகா சொந்தத் காரணமாக வெளிநாடு சென்றவர் இதுவரை நாடுதிரும்பவில்லை. தாமதித்தவர் தான் நாடு திரும்பியுள்ளார்.

அவர் எப்பொழுது நாடு திரும்பினாலும் இங்கு நிவாரண உதவிகளில் பாகுபாடு காட்டப்படுவதாகக் குரல் எழுப்பியுள்ளது. வெளிநாடுகள் பெருமளவு உதவிகளைச் செய்யப்போகின்றன. இந்த உதவிகள் எங்கு போய்ச் சேரப்போகின்றது என்பதில் பலரும் ஐயப்படுகின்றனர். பெரும் பாதிக்குப்புள்ளான



வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படும். வெறும் கண்துடைப்பு நாடகம் நடத்தப்படுமா என்று பலரும் கவலை கொண்டுள்ளனர். எனவே கட்சி வேறுபாடுகளைக் கடந்து, மற்றும் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகக் கூடியுள்ளனர். வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து உதவி வழங்கும் பொழுது, பாரபட்சமாக அரசு நடந்து கொள்ளாமல் இருக்க நடவடிக்கை எடுக்கமாறு கேட்கவுள்ளனர். வெளிநாட்டு அரசுகள் நேரடியாக மக்களுக்கு உதவி செய்யமுடியாது. அரசினூடாகவே உதவி வழங்க முடியும் என்று தெரிவிக்கக்கூடும். அப்படியானால், வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களினூடாக வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு உதவிகளைக் கொடுத்துக் கண்காணிக்கலாம் என்றுதமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இந்த ஒற்றுமை வரவேற்கப்படவேண்டியதே.

இந்த ஒற்றுமையுடன் வேறுஒரு சிந்தனையும் எழுந்துள்ளது. முஸ்லிம் இளைஞர்களும், தமிழ் இளைஞர்களும் எந்த வேறுபாடுகளுமின்றி அயராது பாடுபடுவதான செய்தி துனபத்திலும் சிறிது இன்பம் தரும் செய்தியாகும். இந்த ஒன்றுமை கடடி வளர்க்கப்படவேண்டும். எமது ஒற்றுமை எமக்கு விடிவைத்தேடித் தரும் என்ற எண்ணம் மேலும் வளரவேண்டும். இதற்கு இரு தரப்பினரும் பாடுபடவேண்டும். தமிழீழத்தின் சுயாட்சி முஸ்லிம் அரசு இந்த ஒற்றுமையால் ஏற்படும் என்ற நம்பிக்கை வளர்க்கப்படவேண்டும்.

வெளிநாட்டு உதவிகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஒரு தன்னாட்சி அலகு இருந்திருந்தால் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்ற சிந்தனையும் தற்பொழுது உறுதி பெற்று வருகிறது. ஏனெனில் தன்னாட்சி அலகுகள் தான், வெளிநாடுகள நேரடியாகத் தொகையை ஒதுக்கி தமிழ் பகுதிகளின் துயரை நீக்க வழிகண்டிருப்பார்கள். தன்னாட்சி அலகின் அவசியத்தைக் கூட இந்தப் பேரழிவு காட்டிநிற்கின்றது எனலாம்.

துன்பப்பட்ட மக்களின் நீண்ட தேவைகளை மக்கள் நிறைவேற்ற முடியாததென்பது உண்மைதான். உலர் உணவு, உடுபுடவை என்பவற்றைச் சேகரித்து அவசர உதவிகளைச் செய்ய முடியுமே தவிர, வேறு பெரிதாக எதனையும் சாதிக்க முடியாது.

ஆனாலும் சில உதவிகளைக் காத்திரமாகச் செய்யமுடியும்.

1974ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒன்பது உயிர்கள் பறிக்கப்பட்ட பொழுது, யாழ்ப்பாணத்தில் தைப் பொங்கலை மக்கள் கொண்டாடவில்லை. அதேபோன்று வருகின்ற ஆங்கிலப் புத்தாண்டையும், தைப்பொங்கல் திருநாளையும் வெடிகள் கொளுத்தி ஆடம்பரமாகக் கொண்டாடுவதை தவிர்க்க வேண்டும். உடுக்க ஈரஉடையின்றி, தாய் தந்தை உடன்பிறப்புக்கள் யாருமின்றி எமது செல்வங்கள் துன்பப்படும்போது கொண்டாட்டங்கள் தேவைதானா, என்று சிந்திக்க வேண்டும். வெடிகளுக்குச் செலவிடும் பணத்தையும், புது உடைகளுக்குச் செலவிடும் பணத்தையும், அல்லது உடைகளையும் பரிதவித்துக் கொண்டிருக்கும் எம்மவர்களுக்குக் கொடுத்தால், அவர்கள் சற்றுக் கவலையை மறப்பர். அதிலே நாங்கள் மனமகிழ்வடைவோம். எனவே 2005 புத்தாண்டு, தைப் பொங்கல் திருநாள்களைக் கொண்டாடாது துயர்துடைக்கும் நாளாகக் கருதிச் செயற்படுவோம்.

கொடிய கடலலைகளுக்குச் செந்தளிர் சிறுவர் இல்லம் கூடத் தப்பமுடியாது போனமை நெஞ்சை உருக்கும் நிகழ்வாக நிழலாடிக் கொண்டிருக்கிறது. எனவே முடியுமானவரை தாய் தந்தை குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்த்துக் கல்வியூட்ட இயலுமானவர்கள் முன்வரவேண்டும். முடிந்தவர்கள் என்றால், பெரும்பாலானவர்களால் முடியும். ஒரு குழந்தையைத் தத்தெடுத்து ஒரு குடும்பம் என்ற கணக்கில் முன்வந்தால் அனாதைகள் என்ற நிலையை நீக்கிவிடமுடியும். எனவே எல்லோரும் ஒன்றுபட்டு இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் துயர் துடைப்போம். □

---

ரிஷபம்

# உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

மிதுன ராசி அன்பர்களே எப்போதும் சிரித்துப் பேசும் குணம் கொண்ட உங்களின் சிரிப்பில் வெகுளித்தனம் இருக்காது. உங்கள் காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். உங்கள் ஆட்சி நாயகன் புதன், இதனால் உங்களின் மனதில் என்றும் பசுமையான நினைவுகளே படர்ந்திருக்கும். பிறரிடம் இதமாகப் பேசி பழகும் தன்மையைக் கொண்டவர்கள். இந்தப் புத்தாண்டு, ராகுவின் சிறப்பான் பலத்தோடு தொடங்குகிறது. இது ஏழரை சனிகாலம் என்றாலும், இந்த ஆண்டில் நான்கு முக்கிய கிரக பெயர்ச்சி இருப்பதால், பலன்கள் மாறிக்கொண்டே இருக்கும். அதன் அடிப்படையில் இந்த ஆண்டு ஏதாவது ஒரு கிரகம் உங்களுக்கு நன்மை தந்து கொண்டு தான் இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் ராகுவின் பலத்தால், பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். அவர் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இடம்மாறி 10 இடத்துக்குச் செல்கிறார். இது சிறப்பான இடமல்ல. அதன்பின் அவர் தொழில் இடர்பாடுகளைக் கொடுக்கலாம். ராகுவுக்கு இணையான கிரகமான கேது தற்போது 5 ஆம் இடத்தில் இருக்கிறார். இதுவும் சுமாரான நிலைதான். அவர் உடல் நலனில் பிரச்சினையைத் தந்து கொண்டிருப்பார். குறிப்பாக பிள்ளைகள் நலனில் அக்கறை காட்ட வேண்டியிதிருக்கும். அவரும் பெப்ரவரி 28 ஆம் திகதி இடமாறி 4 ஆம் இடத்துக்கு வருகிறார். இது கூட நன்மைதரும் இடமல்ல.

சனி உங்கள் ராசியில் இருப்பதால், வீண் அலைச்சல், காரியம் கைகூடாமல் போதல் போன்ற நிகழ்வுகள் நடக்கலாம். அவர் ஜூன் 27 ஆம் திகதி இடமாறி உங்கள் ராசிக்கு 2 ஆம் இடமான கடகத்துக்கு போகிறார். இதுவும் சிறப்பான இடமல்ல. அவர் இருப்பிடம் சரியில்லை என்றாலும், ஜூன் மாதம் வரை அவரது 3 ஆம் இடத்துப் பார்வையும், அதன்பின் 10 இடத்துப் பார்வையும் சிறப்பாக அமையும். மேலும் சனி உங்கள் ராசிக்கு நட்பு கிரகமாதலால் அவரால் அவ்வளவு கெடுபலன்கள் உங்களுக்கு வராது.

குருபகவான் தற்போது 5 ஆம் இடமான கன்னியில் சஞ்சரிக்கிறார். இது சிறப்பானது அல்ல, அவர் குடும்பத்தில் பல்வேறு பிரச்சினையை உருவாக்கி இருப்பார். அந்த இன்னல்கள் இந்த ஆண்டும் தொடரலாம். ஆனால், செப்ரெம்பர் 14 ஆம் திகதி அவர் இடம்மாறி நன்மைதரும இடத்துக்குச் செல்கிறார். அதன்பின் குடும்ப பிரச்சினை தீரும். மேம்பாடு காணலாம். மேலும் அவரது 5, 7 ஆம் இடத்துப்பார்வைகள் சிறப்பாக அமையும். அதன் மூலமும் நன்மைகள் கிடைக்கும்.

மேற்கண்ட நிலையில் பார்க்கும்போது, ராகு அதனை அடுத்து குருவும் நன்மை தருவதால், இந்த ஆண்டு சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. வந்த வகையில் விரிவான பலன்களை இனி காணலாம்.

நாம் ஏற்கனவே சொன்னபடி பொருளாதார ரீதியில் எந்த இடர்பாடும் வராது. ஆனால், எந்த ஒரு காரியத்தையும் அவ்வளவு எளிதாகச் செய்து முடிக்க முடியாது. உங்கள் முயற்சியில் தடைகள் வரலாம். ஆனால் அதை முறியடித்து வெற்றி காண்பது உங்களின் தளராத முயற்சியில் தான் இருக்கிறது. ஆண்டின் தொடக்கத்தில் பெண்கள் மூலம் எந்த ஒரு காரியத்தையும் வெற்றிகரமாக முடிக்கலாம். அதன்பின் உங்கள் சாமர்த்தியம் கைகூடும். தேவைகள் பூர்த்தி ஆகும். வீண் செலவுகளும் ஏற்பட வாய்ப்பு உண்டு. சிக்கனமாக இருப்பது நல்லது. மதிப்பு, மரியாதை சீராக இருக்கும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். சிலர் அதிக முயற்சி எடுத்து புதிய சொத்து, வீடு, மனை வாங்கலாம். ஆனால் அதற்கு ஆண்டின் பிற்பகுதியில் தான் நேரம் கூடிவரும்.

குடும்பம்: தேவைகள் பூர்த்தியாகும். ஆனாலும் எதிர்பார்த்த மகிழ்ச்சியும், ஆரவாரமும் உங்களிடம் இருக்காது. தம்பதியினரிடையே கனிவான போக்கு இல்லாததால், கசப்பான சம்பவங்களே அதிகம் நிகழ்ந்திருக்கும். இதனால் குடும்பத்தை விட்டுப்பிரியும் நிலை கூட உருவாகி இருக்கலாம். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் தடைப் படலாம். இந்தப் பிற்போக்கான நிகழ்வுக்கு செம்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு பின் முடிவு கட்டலாம். அதன்பின் தம்பதியினரிடையே ஒற்றுமை ஏற்படும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடி வரும். அதுவும் நல்ல வரனாகவே அமையும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள், புத்தாடை, அணிகலன்கள் வாங்கலாம். சிலர் குழந்தை பாக்கியம் பெறுவர்.

உத்தியோகம்: ஆண்டின் தொடக்கத்தில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். உங்கள் திறமையும், அனுபவமும் கூட ஏற்படாமல் போகலாம். விருப்பம் இல்லாத இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டு அவதிக்குள்ளாகலாம். எனவே மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். செம்ரெம்பர் 14 ஆம் திகதிக்குப் பிறகு தற்போது படும் இன்னல்களுக்கு பலன்களைக் காணலாம். வேலையில் திருப்தி காண்பீர்கள். முன்னேற்றம் இருக்கும். உங்களைப் புரிந்து கொள்ளாதவர்கள் தங்கள் தவறை உணர்வாகள். உங்கள் திறமை பளிச்சிடும். தடைப்பட்டு வந்த பதவிஉயர்வு, சம்பள உயர்வு தானாக வரும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் பெறலாம். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு.

வியாபாரம்: உழைப்புக்கு ஏற்ப வருமானம் கிடைக்கும். அதேநேரம் இது ஏழரைச் சனிகாலம் என்பதால், அளவுக்கு அதிகமாக ஆசை கொள்ளாதிருப்பது நல்லது. எதிலும் அதிக முதலீடு செய்யவேண்டாம். புதிய தொழில் தொடங்கும் எண்ணத்தை தற்காலிகமாக ஒத்து வையுங்கள். இருக்கும் தொழிலை விரிவுபடுத்தலாம். சிலர் வீண் அலைச்சலைச் சந்திக்க நேரிடலாம். அதேபோல் வாடிக்கையாளர்களிடம் இணக்கமான போக்குடன் நடந்து கொள்ளவேண்டும். பெப்ரவரிக்கு பிறகு சிலர் தீயோர்சேர்க்கைக்கு ஆளாகி, பணத்தை விரயமாக்கலாம். சனியின் பார்வை சிறப்பாக இருப்பதால், தொழில் பின்தங்கிய நிலை ஒருபோதும் ஏற்படாது, நெல், போதுமை, சோளம் போன்ற தானிய வியாபாரம், புத்தகம் அச்சிடுவோர் போன்றவை செம்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு மேம்பாடுகாணுவர். பெண்கள் குதூகலமாகக் காணப்படுவர். ஆண்டின் தொடக்கத்தில் கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் விட்டுக்கொடுத்துப் போகவும். ஆனால் உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். செம்ரெம்பர் மாததத்துக்குப் பிறகு நிலைமை மேம்படும். கணவரிடம் நற்பெயர் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

வழக்கு விவகாரங்கள் சுமாராக இருக்கும். தீர்ப்புகள் பாதகமாக அமையாது. சிலருக்கு வழக்கு நீண்டு கொண்டே போகலாம். புதிய வழக்கு எதிலும் இறங்க வேண்டாம்.

உடல்நலம்: ஆண்டின் தொடக்கத்தில் சிற்சில உபாதைகள் வரலாம். பிள்ளைகள் உடல்நலனில் அக்கறை காட்ட வேண்டியிருக்கும். ஆனால் பெப்ரவரிக்குப் பின் உடல நலம் தேறும். மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகள் உடல் நலன் தேறும்.

## பரிகாரம்

சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றுங்கள். காக்கைக்கு அன்னமிடுங்கள். சந்தர்ப்பம் கிடைத்தால், திருநள்ளாறு சென்று வரலாம். பெருமாள் கோயிலுக்குச் சென்று வாருங்கள். செம்ரெம்பர் மாதம் வரை வியாழக்கிழமை தட்சணாமூர்த்தி அர்ச்சனை செய்யலாம். துர்க்கை வழிபாடு முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். ஊனமுற்றவர்களுக்கும், ஆதரவற்ற விதவைகளுக்கும் இயன்ற உதவி செய்யுங்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ*
*மன்உயிர்க்கு இன்னா செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## எரிகிற வீட்டில் பிடுங்க நினைப்போர் குறித்து எச்சரிக்கை வேண்டும்....!

கடற்தாய் ஆடிய ஊழிக்கூத்தின் அலைகளால் ஏற்பட்ட அனர்த்தங்களின் எதிரொலியாக திசையெங்கும் கேட்கும் அவலக்குரல்களின் உயிரீர்க்கும் ஓசையானது மானுடநேயம் கொண்ட அனைவரது இதயத்தையும் உருகவைத்துக் கொண்டிருக்கும் அதேசமயம், இன்னொருபுறம் இந்த மானுடப் பேரழிவால் ஏற்பட்டுள்ள மாபெரும் துயரில் மூழ்கித் தவிக்கும் - பாதிக்கப்பட்ட - பல்லாயிரக்கணக்கான மக்களுக்கான துயர் துடைக்கும் பணிகளில் உலகம் தன்னை ஈடுபடுத்த ஆரம்பித்துள்ளமை ஆறுதல் தரும் விடயமே.

திரும்பும் இடமெங்கும் ஆதரவற்றோர்க்கு உதவுங்கள், நிராதரவான நிலையில் தவிக்கும் எங்களின் உடன் பிறப்புகளுக்காக உதவ முன்வாருங்கள் என்ற ஒலி கேட்ட வண்ணம் இருக்கிறது. மக்கள் அனைவரும் மனிதநேயப் பணிகளில் தத்தம் இயல்புக்கேற்ப ஈடுபடுவதைப் பார்க்கையில் மனிதம் இன்னும் சாகவில்லை என்ற திருப்தி ஏற்படவே செய்கிறது.

உணவுவகைகள், உடைகள், மருத்துவப் பொருட்கள், குழந்தைகளுக்கான தேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களென நிவாரணப் பணியில் ஈடுபட்டிருப்போருக்கு அள்ளிக் கொடுக்கும் மக்களின் உணர்வு சிலிர்க்க வைக்கிறது.

புலம்பெயர்ந்து வாழும் எம்முறவுகள் தாயக மண்ணில் ஏற்பட்ட அனர்த்தங்களால் துடித்துப்போய் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்தும் துயர்துடைக்கக்காட்டும் வேகம் எமது மக்களை நாம் அநாதரவாகத் துயருறவிடமாட்டோம் என்ற அவர்களின் இதயத்துடிப்பை உணர்த்துகிறது.

எங்கு வாழ்ந்தாலும் நாம் எமது மண்ணோடும் மக்களோடும் பிரிவற்று இதயத்தால் ஒன்றாகி ஒவ்வொரு கணமும் தாய்மண்ணின் வாசத்தோடும், மண்மீதான பாசத்தோடும் இருக்கிறோம் என்ற செய்தியையே அவர்களின் செயல்வேகம் எமக்கு தெரிவிக்கிறது.

- இதுவே எம்மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரே செய்தியாகும்.

- உலக உதவிகள் எம்மக்களுக்கு வந்துசேர முன்னரே உறவுகளின் உதவும் கரங்கள் பல்லாயிரக் கணக்கில் நீளத் தொடங்கிவிட்டன. இதில் எமது சகோதர பத்திரிகைகளும் ஏனைய தமிழ் தொடர்பூடகங்களும் முழுமூச்சுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணிகளில் ஏனையோருக்கு முன்னோடியாக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இத்தகைய நிறைவு தரும் பணிகளுக்கு இடையில் எரிகிறவீட்டில் பிடுங்கியது அறுதியென நினைத்துச் செயற்படும் சில அயோக்கியப் பேர்வழிகளும், மக்கள் துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபடும் தொண்டர்களாகத் தம்மைப் போலித்தனமாக இனங்காட்டிக்கொண்டு, நிதி மற்றும் நிவாரணப் பொருட்களை தம்மிச்சைப்படி, சுயநல இலக்குடன் சேகரித்து வருவதாக வரும் செய்திகள்தான் வேதனையையும், சினத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

இது தொடர்பாக பலர் எமது அலுவலகத்துக்கு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அறிவித்து கவலை தெரிவித்ததுடன் இவர்கள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென அறியத்தருமாறும் வேண்டிக் கொண்டனர்.

இது சமூகவிரோதச் செயல்களில் கடைகெட்ட செயலேயாகும்.

இந்தச் செயல்களில் ஈடுபடுவோரை, சம்பந்தப்பட்டவர்கள் இனங்காண உரிய நடவடிக்கைகளை உடன் எடுப்பது அவசியமாகும்.

அடுத்தது பல்வேறு அமைப்புக்களால், நிறுவனங்களால், குழுக்களால் சேகரிக்கப்படும் நிதிகள், நிவாரணப் பொருட்கள் யாவும் சரியான திட்டமின்றி அவரவர் இஷ்டப்படி விநியோகிக்கும் பணியை மேற்கொள்ளநேருமாயின் அது உரியவர்களுக்கு சரியான - சீரான முறையில் வழங்கப்படுமா என்பதும் சந்தேகமாகும்.

எனவே இது குறித்தும் பொறுப்புணர்வுடன் செயற்படுபவர்கள் ஆழ்ந்த கவனத்தில் எடுப்பதும் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் ஒரே இடத்தில் குவிமையப்படுத்தப்படாது, சீராக பரவலாக்கப்படவேண்டியதே இன்று முக்கியமான செயற்பாடாகவும் இருக்கவேண்டும்.

எல்லாவற்றுள்ளும் சமூக விரோதிகள், ஊடுருவிச் செயற்பட வாய்ப்புண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. சில தனிநபர்கள் நிவாரணநிதி சேகரிக்கவென்றே தனியாக படிவங்களையும் அடித்து விநியோகித்துள்ளதாகவும் வாங்கும் நிதிக்கு சிட்டை (Bill)யும் கொடுப்பதாகவும் கூட செய்தி கிடைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளையே - மக்களின் கருணையுள்ளத்தைப் பயன்படுத்தி ஏமாற்றிப்பறிக்கும் முயற்சியில் சம்பந்தப்பட்டுள்ளோரை இனங்காட்டிக் கொடுக்கவேண்டியது மக்களின் சமூகப் பொறுப்பாகும்.

அவலங்களை எதிர்கொண்டு அல்லற்படும் பல்லாயிரவர்களுக்கு உதவவேண்டிய பணிக்குத் தாமே முன்வந்து பங்காற்றவருவோர் ஒன்றிணைந்து ஒரே அமைப்பின்கீழ் செயற்படுவார்களேயானால் சமூகவிரோதிகள் தலையெடுக்க முடியாது போய்விடுவதுடன், பாதிக்கப்பட்டோருக்கான தேவைகள் சீராக - பரவலாக விநியோகிக்கவும் முடியும்.

# நாடும் நடப்பும்




### ஊர்சுற்றியார் பார்வையில்...

## அனர்த்தத்தால் மக்கள்தான் மடிந்தார்கள் மனிதம் மடியவில்லை!

இறந்துபோன தன் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கேட்டு ஒருதாய் எங்கெல்லாமோ ஓடி அலைந்தாளாம்.

ஒருவராலும் இறந்த குழந்தையின் உயிரை மீட்டுக் கொடுக்க முடியவில்லை.

உயிரை மீண்டும் கொடுக்க முடியாதென்பது அவர்கள் அறிந்ததே.

அவர்கள் என்னதான் சமாதானம் சொன்னாலும், அந்தத் தாயின் உள்ளம் அதைக் கேட்கும் நிலையில் இருக்குமா?

குழந்தையையும் எடுத்துக்கொண்டு மௌனநிலையிலிருந்த புத்தர் பிரானிடம் அந்தத்தாய் சென்றாள்-

இறந்துபோன தன் ஒரே செல்லக் குழந்தையை உயிர்மீட்டுத் தருமாறு ஆறாத கண்ணீருடன் மன்றாடினாள்.

பிரிந்த எந்த உயிரையும் மனிதனால் மீட்கமுடியாது என்பது போதிமாதவனுக்குத் தெரியும்.

ஆனாலும் அவளாகவே இதை உணர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர் நினைத்தார்..

எந்தக் காலத்திலும் சாவு நெருங்காத ஒரு வீட்டில் போய் கொஞ்சம் கடுகுவாங்கி வந்தாயானால் இறந்த உனது குழந்தையை உயிருடன் மீட்கலாம் என்று அந்தத்தாயிடம் கூறி, அவளை அனுப்பிவைத்தார் புத்தர்.

ஒவ்வொரு வீடாகச் சென்ற அந்தத் தாய் எவருமே இறவாத வீட்டில் கடுகு கேட்டு அலைந்தாள்.

அப்படி ஒருவருமே சாகாத வீடு அவளுக்குக் கிடைக்கவில்லை.

பிறந்தவர் ஒரு நாள் இறப்பது நியதி என்பதை அவள் உணர்ந்தாள்.

கடலன்னையின் சீற்றத்தால் இன்று பிஞ்சுக் குழந்தைகள் முதல் முதியவர்வரை ஆயிரக்கணக்கில் உயிர்களைப் பறிகொடுத்து, ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் மக்களுக்கு புத்தரின் இந்தக்கதை எந்தளவுக்கு ஆறுதல் அளிக்கும்?

ஒரேநொடியில் குழந்தைகளை இழந்து தவிக்கும் தாய்மார்களும், கணவனை கடல் அலைக்குப் பலிகொடுத்த மனைவிக்கும், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும், பிள்ளைகளை இழந்த பெற்றோர்களுக்கும் என்று சிறிதும் எதிர்பாராமல் சில கணங்களுக்குள் அநாதைகளாகிவிட்ட இந்தமக்களில் யார், யாருக்கு ஆறுதல் கூறித் தேற்றமுடியும்? (ஆறுதல் சொல்லக் கூடிய இழப்புக்களா இவை) ஆனால், இலங்கையின் வரலாற்றிலேயே இதுவரை கண்டும், கேட்டும் அறிந்திராத மிகக் கொடூரமான இயற்கை அனர்த்தம் இப்பொழுது மின்னாமல் முழங்காமல் ஏற்பட்டிருக்கிறது.

கடலோரக் கிராமங்களிலெல்லாம் பிணக்குவியல்கள். கட லோரங்களில் இடிந்த வீடுகளும், உடைந்த படகுகளும் சேகரித்த பொருட்களும் எங்கும் சிதைவுகளாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த அவலத்தின் மத்தியில் மனிதர்கள்தான் இறந்துபோனார் களேயொழிய மனிதம் முற்றாகச் சாகவில்லையென்பதை எஞ்சியுள்ள மக்கள் ஓடோடி உதவிபுரிந்து, நிலைநாட்டிக் கொண்டிருப்பது பெரும் ஆறுதல்!

கடந்த இருபதாண்டுப் போரில் ஒருவரை ஒருவர் எதிர்த்து, தமது ஆயுதங்களுக்கு இரை தேடியவர்களும் இனியும் ஆளையாள் உயிர்குடிக்கத் தயாராக இருந்தவர்களும் இன்று ஒருவருக்கொருவர் உயிர் காப்பாற்றுவதில் முனைந்து நின்றது மற்றோர் ஆறுதல்.

தாயகத்திலே தமது உடன்பிறப்புக்கள் இயற்கையின் சீற்றத்தால் உயிரையும், உடமைகளையும் இழந்து திக்கற்றுத் திகைத்து நிற்கிறார்கள் என்பதை அறிந்த மறுகணமே அள்ளிக் கொடுக்கக்கூடியவர்கள் அள்ளிக்கொடுத்தும், அது முடியாதவர்கள் தொடர்ந்து கிள்ளிக்கொடுத்தும் தமது பங்களிப்பைச் செலுத்த முன்வந்துள்ள புலம்பெயர்ந்த மக்களின் உள்ளத்தின் உயர்வு பெரும் ஆறுதல்.

மக்கள் தாமாக முன்வந்து அநாதையாக நிற்கும் மக்களுக்கு அளிக்கும் உதவிகள் சரியானபடி அவர்களுக்குப் போய்ச் சேருவதற்காக திட்டமிட்டுச் செயலாற்றும் பொது நிறுவனங்களும், இவற்றை அந்தந்த இடங்களிலிருந்து சரியாகச் செயற்படுத்தும் விடுதலைப் புலிப் போராளிகளும் மக்களுக்கு மேலும் அளிக்கும் ஆறுதல்.

இலங்கை அரசாங்கம் உதவும்வரை காத்திராமல், போர் காலத்தில் மட்டுமல்ல போர்நிறுத்த காலத்திலும், சமாதான காலத்திலுமல்ல இயற்கை அனர்த்தம் ஏற்படும் காலத்திலும் மக்களுக்குச் சேவைசெய்து பாதுகாக்க ஒழுங்கும், கட்டுப்பாடுமிக்க ஒரு பயிற்சிபெற்ற படையே தயாராக இருக்கின்றதென்பது, தாயக மக்கள் நினைத்து நினைத்துப் பெருமைப் படக் கூடிய பெரும் ஆறுதல்.

லண்டனிலுள்ள பி.பி.ஸி வானொலி நிருபர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பேட்டி கண்டார். இந்தச் சமயம் அவர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், பாதிப்புற்றோருக்கு உதவுவதென்றும், அவர்களின் நலன் குறித்து எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் இணைத்துத் தாம் செயற்படவிருப்பதாகச் தெரிவித்திருப்பதும், காலம் கடந்ததாயினும் சற்று ஆறுதல்தான்.

நேற்று, நான் இதே பத்தியில் இதுபற்றிக் குறிப்பிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிய உலகசமுதாயத்துக்கும், உள்நாட்டுச்சமுதாயத்துக்கும் அழைப்பு விடுத்தபோது, விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தால் தேசிய ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்கும் விடுத்த அழைப்பாக அது அமைந்திருக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன். இப்போதும்கூட பி.பி.ஸி.நிருபரின் கேள்விக்குத்தான், அவர் விடுதலைப்புலிகளையும் இணைத்துச் சொல்லியிருக்கிறாரேயொழிய இயற்கை அனர்த்தம் இன்னும் அவரை ஒற்றுமைக்கு இணைக்காதது ஆறுதல் அளிப்பதாக இல்லை!

உலக சமுதாயமும் இலங்கையில் திடீரென ஏற்பட்ட தேசிய அழிவு கேட்டு உடனடியாக உதவிபுரிவதற்கு முன்வந்திருப்பது மற்றுமொரு பெரும் ஆறுதல்.

உடனடியாகக் கிடைக்கும் உதவிகளும், வெளியிலிருந்துவரும் உதவிகளும் கடலோரப் பகுதி மக்களுக்கு சூறாவளி, கடல்பெருக்கு, இதுபோன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் காலங்களில் பாதுகாப்பாகத் தங்கு வதற்குரிய சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவ வேண்டும்.

இந்த இயற்கை அனர்த்தம் தென்னிந்தியாவிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பது உண்மையே. ஆனாலும், இராமநாதபுர மாவட்டம் போன்ற மற்றும் பல பகுதிகளில் கடற்கரைப் பகுதிகளில் புயற்காற்று சூறாவளிபோன்ற அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்கு வட்டவடிவத்துள் மக்கள் தங்கக்கூடிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில் இந்தக் கட்டடங்கள் கடலோர மக்களுக்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் இருக்கின்றன.

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் புனர்வாழ்வு பெறுவதற்கும் இந்த உதவிகள் பயன்பட வேண்டும்.

சொல்லாமல், கொள்ளாமல் வந்து மக்கள் இன ரீதியாக, மதரீதியாக, மொழிரீதியாக வேறுபட்டிருந்தாலும், மக்கள் எல்லோரும் மனிதர்கள்தான் என்பதை, உறைக்கக் கூடியதாகவே இயற்கை சொல்லிச் சென்றிருக்கிறது.

மனிதன் உணவை, மனிதன் எப்படிப் பறிக்கக்கூடாதோ அதேபோல் மனிதன் உரிமையையும் பறிக்கக்கூடாது என்பதையும் இந்தக் கடல் அலைகள் உணர்த்திச் சென்றிருக்கின்றன.

உணரவேண்டியவர்கள் உணர்ந்து கொண்டால் தீமையிலும் நன்மை விளைய வாய்ப்புண்டு.

* * *

மனிதர்களை ஆயிரக்கணக்கில் பலி எடுத்துள்ள இந்தக் கடற்கொந்தளிப்பு மிருகங்களைப் பெரிதாக அடித்துச் சென்றதாகவோ, மிருகங்கள் பெருமளவில் மிதந்து சென்றதாகவோ தெரியவில்லையே ஏன்?

மிருகங்களுக்கு இதுபற்றி முன்னதாகவே தெரிந்திருந்ததா? இப்படி ஒரு அன்பர் கேட்கிறார். யாராவது தெரிந்தால் சொல்லுங்களேன் பயனுள்ளதாக இருக்கும்.

# இயற்கையின் சீற்றத்திலிருந்து மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர்

(வவுனியா)

இயற்கையின் சீற்றத்தால் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் சிக்குண்ட மக்கள் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு -

ரவிக்குமார் சாந்தி (வயது 23) சுண்டிக்குளம், விசுவமடு - ரவிக்குமார் சஞ்சியன் (வயது 3 மாதம்) சுண்டிக்குளம், விசுவமடு, - ரவிக்குமார் சர்மிலா (வயது 3 1/2) சுண்டிக்குளம், விசுவமடு - அமலன் கொன்சி (வயது 28) வண்ணாங்குளம, அமலன் அருண் (வயது 04) வண்ணாங்குளம், ஆசைப்பிள்ளை செல்வம் (வயது 75) கோயில் குடியிருப்பு, மகாலிங்கம் சரோஜினி தேவி (வயது 50) வண்ணாங்குளம், செல்வச்சந்திரன் சதுர்சன் (வயது 2 1/2 மாதம்) வண்ணாங்குளம், ரங்கநாதன் (இளங்கோ) றூபி (வயது 24) நாகேந்திரபுரம், ரங்கநாதன் (இளங்கா) சங்கீதன் (வயது 3) நாகேந்திரபுரம், லோகேந்திரன் சுமணன் (வயது 19) செல்வபுரம், அந்தோனிப்பிள்ளை இருதயமுத்து (வயது 57) வண்ணாங்குளம், வில்பட் மங்களராஜ்குமார் (வயது 34) செல்வபுரம், துரைச்சாமி செல்வநாயகம் (வயது 86) கள்ளப்பாடு, தங்கராசா அருந்தவராசா (வயது 22) கள்ளப்பாடு, சதீஸ் (வயது 23) மணற்குடியிருப்பு, கவிரியேற்பிள்ளை தேவதாஸ் (வயது 67) கள்ளப்பாடு, சின்னையா இளையதம்பி (வயது 68) கள்ளப்பாடு, இளையதம்பி தர்மேந்திரன் (வயது 17) கள்ளப்பாடு, ஆறுமுகம் செல்வராசா (வயது 35) கள்ளப்பாடு, செல்வராசா ஜெசிந்தன் (வயது 11) கள்ளப்பாடு, அரியராசா யோகதாஸன் (வயது 34) மணற்குடியிருப்பு, இராமையா தயானந்தன் (வயது 23) வண்ணாங்குளம், செபமாலை சுதர்சன் (வயது 20) கள்ளபபாடு, முத்துவேல் கண்ணன் (வயது 26) வண்ணாங்குளம், தனம் கேதீஸ்வரன் (வயது 21) வண்ணாங்குளம், செல்லத்துரை செல்வமோகன் (வயது 34) ஓடக்கரை பருத்தித்துறை, திருநாவுக்கரசு தினுசா (வயது 5) ஆழியவளை, செம்பியன்பற்று, லோகேந்திரன் சுமன் (வயது 23) செல்வபுரம் முல்லைத்தீவு, சிவராசா ஜெயமதனா (வயது 22) கள்ளப்பாடு வடக்கு, சுந்தரம் திலீபன் (வயது 11) வண்ணாங்குளம், ரவீந்திரகுமார் மேரிக்கிறோஸ் (வயது 32) வண்ணாங்குளம், யோசப்பு லட்சுமி (வயது 70) உணணரப்பு, கண்ணன் சகாயராணி (வயது 26) வேளாங்கன்னி கோவிலடி, கண்ணன் சுதர்சன் (வயது 3) வேளாங்கன்னி கோவிலடி, அமலதாஸ் சிவக்கொழுந்து (வயது 50) கள்ளப்பாடு, ஜெமிஸ் விஜயகுமார் யோகேஸ்வரி (வயது 14) செல்வபுரம் -

ஜெமிஸ் விஜயகுமார் மரியகிறேற்றா (வயது 10) செல்வபுரம், கபிலன் லஜி - (வயது 24) வண்ணாங்குளம், சிவகுமார் யோகமலர் (வயது 35) கள்ளப்பாடு அந்தோனியார் கோயிலடி, தங்கத்துரை செல்வராணி (வயது 27) கள்ளப்பாடு தங்கத்துரை ரேணுசாந்தன் (வயது 3 1/2) கள்ளப்பாடு, முகுந்தன் நிசாந்தினி (வயது 18) சின்னச்சாளம்பன் ஒட்டுசுட்டான், ஜெகநாதன் பிரச்சித்தம்மா (வயது 40) குமரபுரம் தண்ணீரூற்று, லன்யேபஸ் அக்னோஸ் (வயது 73) மணற்குடியிருப்பு, மனோகராசா யோகராணி (வயது 50) கள்ளப்பாடு, விக்கினேஸ்வரன் ஜான்சி (வயது 13) கள்ளப்பாடு, விக்னேஸ்வரன் கமலா (வயது 38) கள்ளப்பாடு, செலலையா ரஞ்சினிதேவி (வயது 39) தீர்த்தக்கரை, கிருபாகரன் துஸ்யந்தி (வயது 23) செல்வபுரம், கிருபாகரன் கிசானி (வயது 2) செல்வபுரம், ஜெனற் ஜெயக்குமாரி (வயது 40) வண்ணாங்குளம், நோபட் சுதர்சினி (வயது 11) வண்ணாங்குளம், மங்களராஜ்குமார் ஜெயராணி (வயது 24) செல்வபுரம், மங்கள ராஜ்குமார் சஞ்சய்குமார் - (வயது 4 மாதம்) செல்வபுரம், மகேந்திரன் தியாகராணி (வயது 28) கள்ளப்பாடு, ஆனந்தராசா அனுசியா (வயது 1) கள்ளப்பாடு, அருள்நாதர் லீனா (வயது 17) கள்ளப்பாடு, அரியரட்ணம் அனிற்றா (வயது 16) சேகர்ப்பு, தெய்வேந்திரன் தேசிகன் (வயது 3) பெரிய புளியங்குளம் - பன்றிகெய்தகுளம, தெய்வேந்திரன் சர்மிளா (வயது 26) பெரியபுளியங்குளம் - பன்றிகெய்தகுளம், இ.தவராசா (வயது 44) கள்ளப்பாடு, கணபதி ரவிக்குமார் (வயது 25) சுண்டிக்குளம், உதயகுமார் டானியல் (வயது 25) வண்ணாங்குளம், நீக்கிளாப்பிள்ளை ஆரோக்கியநாதன் (வயது 65) வணணாங்குளம், இராசநாயகம் ஆன்சன் நேறினா (வயது 25) வண்ணாங்குளம், புஸ்பராசா பிரதாப் (வயது 17) வண்ணாங்குளம், சவரிமுத்து ஆரோக்கியநாதர் (வயது 70) வண்ணாங்குளம், துரை ஆனந்தன் (வயது 33) தெள்ளிப்பிள்ளையார் கோயிலடி, கொட்டடி பருத்தித்துறை, இராயப்பு அந்தோனிப்பிள்ளை (வயது 43) சீர்திருத்தப்பிரிவு, இரணைப்பாலை, யேசுராசா நிசாந்தன் (வயது 17) மனோக்குடியிருப்பு, ரமணன் (வயது 22) வண்ணாங்குளம், அமலதாஸ் யூலியஸ் (வயது 24) கள்ளப்பாடு, சுப்பிரமணியம் சிறிகந்தராசா (வயது 43) கள்ளப்பாடு, மாணிக்கம் தங்கராசா (வயது 57) கள்ளப்பாடு, பிள்ளைநாதர் செல்லையா (வயது 47) கள்ளப்பாடு, ஜெயநாயகம் றேகன் (வயது 13) வண்ணாங்குளம், ரவி ரவீந்திரராசா (வயது 15) சிலாவத்தை முல்லைத்தீவு, காளியப்பன் முரளி (வயது 26) ஆனைவிழுந்தான் சங்கத்தடி, அழகையா கணேஸ்மாமா (வயது 50) கள்ளப்பாடு, அன்னலிங்கம் சணமுகலிங்கம் (வயது 37) வட்டுவாகல், துரைரத்தினம் செந்தீபன் (வயது 14) கள்ளப்பாடு, துரைரத்தினம் பிரதீபன் (வயது 18) கள்ளப்பாடு, கந்தசாமி தேவராசா (வயது 48) 3 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, இராசதுரை மரியதாஸ் (வயது 60) கள்ளப்பாடு தெற்கு கள்ளப்பாடு, குமாரகுரு சுமன் (வயது 26) வண்ணாங்குளம், ஜெயராஜ் அஜந்தன் (வயது 19) கள்ளப்பாடு, கந்தசாமி சிவராசா (வயது 26) வண்ணாங்குளம முல்லைத்தீவு, கந்தப்பர் கணேஸ் (வயது 80) கள்ளப்பாடு, விக்கினேஸ்வரன் பகிரதன்(வயது 18) கள்ளப்பாடு, ஞானப்பிரகாசம் துரைசிங்கம் (வயது 65) வண்ணாங்குளம், லக்சனா (வயது 7) செந்தமிழ் இல்லம், சங்கர் சங்கீதன் (வயது 21/2) கள்ளப்பாடு முல்லைத்தீவு, மகேந்திரன் நிதர்சன் (வயது 11) கள்ளப்பாடு, இமானுவேல் (வயது 13) அன்புவழிபுரம், முத்துராசா (வயது 60) அன்புவழிபுரம், பாக்கியவதி (வயது 36) ஆண்டிமுனை, செல்வபுரம், உடப்பு, முத்தையா (வயது 52) உடப்புக்கொட்டு, முருகன் (வயது 36) உடபபுக்கொட்டு, ஞானம்மா (வயது 53) உடப்புக்கொட்டு.





கடற்கொந்தளிப்பில் சிக்கி முல்லைத்தீவில் உயிரிழந்த தனது உறவுகளை வைத்தபடி கதறியளும் ஒருவரை மேலுள்ள படத்திலும், வடமராட்சி கிழக்கில் மீட்கப்பட்ட சடலங்கள் பொலித்தீன் பைகளில் போடப்பட்டு தகனங்களுக்காக அடுக்கிவைக்கப்பட்டிருப்பதை கீழுள்ள படங்களிலும் காணலாம்.

# வவுனியாவில் சாரதியை விடுவிக்கக்கோரி நடத்தப்பட்ட போராட்டம் முடிவுக்கு வந்தது!

வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையின் சாரதியை விடுவிக்கக்கோரி கடந்த சனிக்கிழமை காலை முதல் சாலைப் பணியாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் காலை 10 மணிக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

வன்னி மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தலையிட்டதையடுத்து கைதான சாரதி பிணையில் செல்ல அனு மதிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை கண்டி வீதியில் வைத்து தனியார் பஸ் சாரதி ஒருவரை இவர் தாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து குறித்த சாரதி கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டார்.

தமது சக பணியாளர் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்தே வவுனியா சாலை பணியாளர்கள் வேலைக்குச் செல்லாது பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பிற்கு செல்லும் வழியில் தனியார் பஸ் சாரதிக்கும், வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட சாலையின் சாரதிக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்று, முறுகல் நிலையேற்பட்டது. இதன் விளைவாகவே கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு பின்னர் பஸ் சேவைகள் வழமைபோல் நடைபெற்று வருவதாக சாலையின் முகாமைத்துவ பணிப்பாளார் எஸ். சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.




# கடற்கொந்தளிப்பு ஏற்பட்ட பகுதிகளில் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம்!

கடற்கொந்தழிப்புக் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயநிலை உருவாகியிருப்பதாக தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்கொந்தழிப்பு ஏற்பட்ட பகுதிகள் அனைத்திலும் தொற்றுநோய்த் தாக்கம் ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது. எனவே கடற்பெருக்கு இடம்பெற்ற பகுதிகளில் உள்ள எந்தப் பொருட்களையும் எடுத்துப் பயன்படுத்த வேண்டாம். இந்தப் பகுதிகளிலிருந்து குடிநீர் பெறவேண்டாம். இவற்றின் மூலம் உயிராபத்து ஏற்படுத்தக் கூடிய தொற்று நோய்கள் உருவாகலாம்.

எனவே, மேற்குறித்த வேண்டுகோளுக்கு அமைவாக செயற்படுமாறு கேட்கப்படுகின்றனர். இது மட்டுமன்றி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து தொற்றுநோய் அபாயத்தில் இருந்து பாதுகாப்பாக இருக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் மக்களைக் கேட்டுள்ளனர்.

# வவுனியா வீதி அபிவிருத்தி சபைக்கு சொந்தமான வீதிகள் புனரமைப்பு!

வவுனியா மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்தாண்டு அதற்கென ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாக பயன்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டுக்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 14 மில்லியன் ரூபாவுக்கான வேலைகள் நடைபெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் கே.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 9 வீதிகள் அனைத்தும் பராமரித்து, வேலைகளும் நடைபெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# திட்டமிடல் அலுவலர்களுக்கு பயிற்சிநெறி!

கிளிநொச்சி மாவட்டத்தில் போரூட் நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்திப் பிரிவால் கிளிநொச்சி மாவட்டத்தின் திட்டமிடல் சார்ந்த அலுவலர்களின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்கான பயிற்சி நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சிநெறி கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் ஜனவரி மாதம் 3, 4, 5 ஆம் திகதிகளில் நடைபெறவுளளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.







கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டு, காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதனைக் காணலாம்.

# பர்மிய நிலப்பரப்பு 40 அடி உயர்ந்தது!

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவுக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட 'சுனாமி' பூகம்பத்தை அடுத்து உலக நிலப்பரப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பூகம்பத்தின் கடும் அதிர்வு காரணமாக இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையிலான புவியோட்டில் மோதல் உண்டானது. இந்த நிலமோதலால் 1000 கி.மீ.தூரம் நிலத்தில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. நிலமோதலின் வேகம் காரணமாக பர்மாவின் நிலப்பரப்பு 40 அடி உயர்ந்துவிட்டது. அதாவது இந்திய நிரப்பரப்பைவிட மியான்மார் நாட்டின் நிலப்பரப்பு 4 மாடி அளவுக்கு உயர்ந்துவிட்டது.

இது தவிர பூகம்பம் 9.0 ரிச்டர் அளவுக்கு இருந்ததால் சுமாத்ரா தீவு தெற்குத்திசை நோக்கி சுமார் 100 அடி தூரத்துக்கு நகர்ந்துவிட்டது. தொடர் நில அதிர்வுகளால் இந்தியா வடகிழக்குத் திசைநோக்கி ஆண்டுக்கு 5 செ.மீ. தூரம் வரை நகர்வதாக அமெரிக்கா ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் இந்திய கடலில் 37 தடவை நிலஅதிர்வு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மக்களுக்கு உணவுப் பொருட்கள்; நேற்று 15 லொறிகளில் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் அனுசரணையுடன் கிழக்கு மாகாணத்தில கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கும் முகமாக யாழ்.குடாநாட்டிலுள்ள பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஒரு கோடி ரூபா பெறுமதியில் சேகரிக்கப்பட்ட உணவுப்பொருட்களை 15 லொறிகளில் ஏற்றியவாறு நேற்று யாழ்.குடாநாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றன.

இந்த உணவுப் பொருட்களை யாழ்.பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தேசிய எழுச்சிப்பேரவையினர், யாழ். மாநகரசபை ஆகியன வழங்கியிருந்தன. இவர்கள் வழங்கிய உலர் உணவுப் பொருட்களில் அரிசி, சீனி, மா, பருப்பு, பால்மாவகை மருந்துவகை தைத்த ஆடைகள் என்பன அடங்குகின்றன.



இந்தப் பொருட்கள் கிழக்கு மாகாணத்தில் இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்கும் வகையில் இன்று வழங்கப்படவுள்ளன.

## கடற் கொந்தளிப்பில் சிக்கி காயமடைந்து

# யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர்

கடற்கொந்தளிப்பில் அகப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களின் விபரம் வருமாறு -

**பருத்தித்துறை**

பி.சலீற்றம்மா (68), எஸ்.புஸ்பலதா(26), எஸ்.மஞ்சுளா(43), வி.நிவேதா(04), வி.தர்சினி(06), சதுர்சன்(04), வி.இனிதா(36), மரிய[illegible]ந்தி (29), ஜே.சதோசி (06), [illegible]ஷ்பரேகா(21), ஏ.சோமவதி (70), ஏ.பேரின்பராணி, (39) எஸ்சிவநேசம் (60), எஸ்.சாலினி (25), வி.அஜந்தன்,(03), எஸ்.யதுசா(07) சபேசனி(09), வி.யோகராணி(39), ஏ.கிருஷ்ணவேணி(30), ரி.மேரி(42), கைலாங்கிரநாதன்(60), பாலசிங்கம்(50), ஜெ.சதோசினி(06), கதிரமணி(76), காண்டீபன்(75), விஜயகாந்(16), ஜே.ஜெதசினா(20) சக்கோட்டை, ஏ.அருள் தேவதாஸ்(43) எஸ்.சுதாகரன்(23), அல்பிரட் ரூபன் (36), ஜே.அன்ரன் (37) பொலிகண்டி,

ஏ.ஜெயபாலசிங்கம்(52) கற்கோவளம், ஏ.அரசேந்திரன்(27), கே.செல்லக் கதிரமலை (76) எம்.சிமியோன்பிள்ளை(40), ஏ.நாவேந்தன்(24), எம்.சத்தியராஜ்(20) தும்பளை, கே.சிவசித்தி (55) அல்வாய், ஜே.நடராஜா (81) தும்பளை.

**வல்வெட்டித்துறை**

[illegible]ஏ.சந்திரகாந்தி(69), அபிதா ([illegible]), ஸ்ரீதரன்(6), எஸ்.பத்மராணி (54), ஜி.சந்திராணி(37), காண்டீபன்(25), செல்வராசா(70), சுந்தரலிங்கம் (48), எஸ்.விநாயகமூர்த்தி (69), பி.அப்புலிங்கம்(49), ரி.குமாரவேல்(27), எல்.சுரேஸ்(24), ஆர்.மனோகரன்(44), எம்.இமானுவேல் (65), என்.செந்தில்வேல் (77), எஸ்.ரவிச்சந்திரன்(28), ரி.தர்மசீலன்(15), என்.பாலசுப்பிரமணியம்(29), கே.வேலும்மயிலும்(60), எஸ். கிருஸ்ணகுமார் (38), எஸ்.சிவலிங்கம்(55) துரைராஜ்(49), ஜெ.கணேசலிங்கம் (38), ஜே.இராஜகோபால்(29), ஆர்.ஜெயக்குமார் (29).

**உடுத்துறை**

ஆர்.மதுசா(10மாதம்),லஷ்மன் (09), நிதுஷா (13), நிஷான்(10), ஏ.ரஜனி(26), எஸ்.சதீஸ்(11), எஸ்.சுரேகா(15), என்.விஜிதா(16), என்.வித்தியா(13), என்.காந்தமலர் (52), ஆர்.லஷ்மன்(09), ஜி.பவளராணி(40), ஆர்.அன்னபூரணம்(47), பி.ஜெயராணி(46), ஜே.அருந்தவதேவி (40), ரி.சற்குணேஸ்வரி (29), கே.கிருபலஷ்மி, (18), ராமசாமி(42), முருகேசு(70) ,எஸ்.ஆனந்தராஜா, (46),ரி.தயாபரன்(16), என்.நாகேஸ்வரன்(38), கே.ரசிந்திரன்(42), எம்.செல்லையா(57), எஸ்.பரமானந்தம் (62), ஜெ.ஜெகதீஸ்(17), எம்.ரட்ணசிங்கம் (52), எம்.ஜெயபாலன்(36), ஞானகணேசன் (42), எஸ்.தாமோதரன்(51), எம்.பாலசுப்பிரமணியம் (44), ரி.மோகனராஜ்(29).

**மணற்காடு**

வி.ஜேசுதாஸ்(06), தவசீலி, திருமதி ஐ.தேவசீலி(31), ஸ்ரீ ரூபன் (06), ஏ.தனுசியா எம்.சிவசுப்பிரமணியம்(50), கைதம்பிள்ளை (58), ரி.அரியரட்ணம்(35), ஜி.சவரிமுத்து (30), ஞானகிரிதாஸ்(30).

**செம்பியன்பற்று**

வி.மரியமலர் (52) , கே.கலைமகள்(26), எஸ்.ஐரின்(29), எஸ்.வினோசன்(04), என்.நிரோஜன்(03), பி.கரோலின்(30), எஸ்.அருள்ராஜ்(32).

**தாளையடி**

அர்ச்சனா (5), இருதயநாயகி (46),ஜெ.லலிதா(40), செந்தூரா(24), வி.ஜெயரஞ்சினி(26), ஜெ.ஜெயப்பிரியா (13), யூ.தனரஞ்சினி(29), எஸ்.பரமேஸ்வரி(28), பி.சுமதி(38), கே.பரம்சோதி(36), ஏ.அனுசியா (19),கே.விமலதேவி(47), பி.சுவர்ணா (17), ஏ.வனிதா(39), எஸ்.பூபதி (11), ஏ.மருதம்மா(59), பி.கமலாதேவி (42), றொனாஸ்(14), எம்.மங்கையற்கரசி(33), எஸ்.சோதிமலர் (56),கே.சசீதா(19), எம்.வசந்தராணி (48), தெய்வேந்திரா(20), ஆர்.ரட்ணபிள்ளை(74), லூர்துநாயகி (54), ஸ்ரீகந்தசாமி(54), மனோகரன் (27), பி.செல்வகுமார் (33), எல். ஐக்கியதீபன்(55), என்.கேதீஸ்வரன் (16), பி.தமிழகன்(29), சசிகுமார் (26), பி. தங்கேஸ்வரன்(26), எஸ்.கந்தையா (55), கே.கனகதரன்(26), பி.ஜீன் (17), ஜே.ஜேசுதாசன்(27).

**மருதங்கேணி**

எஸ்.சோபிதா(07), சசிகலா(29), தம்புமணியம்(56),குணகுமார்(31), எஸ்.ராஜ்குமார்(24), வி.ஜெகதீஸ் (17), எம்.பாலசுப்பிரமணியம் (48), எஸ். குலசேகரம்(49), ஏ.சுபாஸ் (17), டி.முதியா(35),பாலச்சந்திரன்(35).

**வத்திராயன்**

ஆர்.கிருசாந்தன்(3மாதம்), வை.இந்திரதேவி(45), பி.நிர்மலாதேவி(55), பி.வாணிஸ்ரீ(17), இ.தர்சினி(18), ஜி.ஜெயராணி(34), விஜயரஞ்சினி(16), எஸ்.கௌசலா(23), ஜீ.ரகு(17), எஸ்.கந்தசாமி(55), கே.கிருபாகரன்(26).

**ஆழியவளை**

எல்.லஷ்மிதேவி(46), பி.லதீபா (04),ஏ.ஜெயவதி(32), வி.தவக்குமார்(24).

சிவநேசன்(60)யோகராணி(34) முனிஸ்கர்(11), நிருபிகா(09), மேரிகா(26), கலைமகள்(24), வனிதா(36), இருதயமாலா(45), மனோகரதேவி(40), அரியரத்தினம்(35) லோறன் கிறிஸ்ரீனா(44), கொன்ரசின்(55) செல்வமலர்35) அன்ரன்(44) றொசான், அன்ரன்(35), கைதீனபிள்ளை(58), ரவிச்சந்திரன்(34), சதோசினி, பரிபூரணி(34), தர்மரூபன்(15), எஸ்.முருகுப்பிள்ளை(35), நவரட்ணம், கிருபலஷ்மி(18), ஜெயசந்திரமணி(35), சோமவதி, சந்திரா, செல்வக்குமரன், சிவரூபன்(21), சுரேஸ், திருமதி.ராமச்சந்திரன்(46) நிசந்தா, சசிதா, சுப்பிரமணியம், வினோசா, பி.தமிழகன், வனிதா, ரகு, விஸ்வலிங்கம், கே.கயகுலசிங்கம்(50), எஸ்.கிருபன்(12) ரி.ரட்ணேஸ்(59), வேலுமணியம்(60), அல்பிரட் ரூபன், எஸ்.அருள்ராஜ், சங்கரப்பிள்ளை(71), சோதிமாலா(56), சிவநேசசுந்தரம்.

வி.விமலா(17), எம்.ரஞ்சித், ஜெயரஞ்சன்(22), அகிலேஸ்வரன், கே.இளையதம்பி, புஸ்பராஜா, ஆர்.சிவானந்தராஜா, பர்ணவாஸ், தேவசகாமணி, கே.குகதாஸ், சச்சிதானந்தன், பிரான்சிஸ், எஸ்.புவனேந்திரன்(46), ஜேசுதாசன், ரி.சிவராஜா, ஆர்.ராஜசேகரன், கே.மகேந்திரன், ஜி.கணேசமூர்த்தி, ஆர்.தயா, கொன்சென்ரைன், கே.கிபாகரன், கே.இராஜகுலசிங்கம்,எஸ்.சந்திரநாதன், கே.ஞானகரன். ஏ.டொறின்டன், எஸ்.ஜஸ்மின், ஏ.அன்ரன், எஸ்.வேலுப்பிள்ளை, எஸ்.சங்கரப்பிள்ளை, ஜெயகௌனா, இராஜகோபால், ரி.வரதராஜா, கே.ஞானரூபன், எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜ், பி.அலிஸ்ரன், எஸ்.பத்திரபிள்ளை, எம்.சங்கரப்பிள்ளை, ஏ.பிரதீபன், பிரான்சிஸ்கா(50) குடத்தனை,

ஏ.பத்திநாதர்(49) இளவாளை, இம்மானுவேல்(55) குடத்தனை, கே.சுதர்சினி(39) நாகர்கோவில், ஜோன் அமிர்தலோஜினி (18) குருநகர், தியாகலிங்கம்(50) காரைநகர், எம்.சத்தியராஜ்(20) இருபாலை, கருணாகரன் குயின்(32) குடாரப்பு, பத்திநாதன்(49) இளவாளை, திருமதி. கே.ராமச்சந்திரன்(56) மூளாய், மாமுனை, ஈ.இமான்னுவேல்(55).

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ துயர் துடைப்பு நிதியம் அமைப்பு!

இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் துயர் துடைப்பிற்காக, யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினால் துயர்துடைப்பு நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்காக நிதிப்பங்களிப்பினைச் செய்ய விரும்புவர்கள் பின்வரும் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மக்கள் வங்கி, பிரதான வீதிக் கிளை, சேமிப்புக் கணக்கு இல.107-012026

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராமிய வங்கி, சேமிப்புக் கணக்கு 11719.

அத்துடன் யாழ்.மாவட்ட அனைத்து தேசிய எழுச்சிப் பேரவைச் செயலகங்களிலும் உதவிக் கொடுப்பனவுகளைச் செய்யலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு

# மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடல் கொந்தளிப்புக் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்கின்ற வடமராட்சி கிழக்குப்பகுதி மக்களுக்கு சர்வதேச தொண்டு நிறுவனங்களும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் உடனடி உதவிகளை வழங்க முனவரவேண்டுமென மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ஜெயசீலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடல் கொந்தளிப்புக் காரணமாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நினைத்துப்பார்க்கமுடியாத உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளனர். மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான அனைத்துக் கரையோரக் கிராமங்களும் அழிந்து போயுள்ளன. சுமார் நாலாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த பத்தாயிரம் மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் எந்தவித உதவிகளும் இல்லாமல் பளைப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

(122)

# மரண விசாரணைகள் தாமதம்; உடல்களை புதைப்பதில் சிக்கல்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட இயற்கை அழிவுகளினால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இறந்தவர்களின் உடல்களை அந்தந்த இடங்களில் வைத்து மரண விசாரணை செய்யமுடியாத நிலையில் உறவுகளை இழந்த மக்கள் இருந்து வருகின்றனர்.

இறந்த உடல்களை மரண விசாரணை செய்வதற்கு மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு வருமாறு உரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறந்த பெருமளவானோரின் சிதைவுற்ற சடலங்கள் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்த பின்னர் மீண்டும் சொந்த இடங்களுக்குக் கொண்டுசென்று அடக்கம் செய்வதில் இப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவது குறித்து, மதகுருமார் உரிய அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியிருந்தும் பொருத்தமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

நேற்று மந்திகை வைத்தியசாலையில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியினைச் சந்தித்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் - இந்தப் பிரச்சினையை அவரது கவனத்துக்குக் கொண்டுவந்தார். இதனைத் தொடர்ந்து அவரால் நியமிக்கப்பட்ட ஒரு திடீர் மரண விசாரணை அதிகாரி மணற்காடு பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சில உடல்கள் மரண விசாரணை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. (31)

# யாழ்.கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு!

தற்போதைய இயற்கை அனர்த்தத்தால் யாழ். கல்வி வலயத்தில் இடம்பெற்ற பாதிப்புக்கள் குறித்த விபரங்களை மாகாண கல்விச் செயலாளர் கோரியுள்ளதாகவும், எனவே இந்தப் பாதிப்புக்கள் தொடர்பான படிவத்தை பூர்த்திசெய்து எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.கல்வி அலுவலகத்தில் நடைபெறும் அதிபர் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அவசரமாக அறிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலை அதிபர்களால் சமர்ப்பிக்கப்படும் இந்த பாதிப்பு விபரங்கள் 31 ஆம் திகதி மாகாண கல்வி அமைச்சுக்கு தொலைமடல் மூலமாக அனுப்பிவைக்கப்படவுள்ளதையும் அதிபர்கள் கவனத்திற் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளதுடன் சகல அதிபர்களையும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

# கடல் கொந்தளிப்பால் இறந்தோருக்கு உடன் இறப்புச் சான்றிதழ் வழங்கவும்!

## பதிவாளர் நாயகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடல் கொந்தளிப்பால் இறந்தவர்களின் இறப்பை மரண விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் பதிவுசெய்து சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விபத்துக்குள்ளான மாவட்டத்தின் எல்லா வைத்தியப் பதிவாளர்களையும் பதிவாளர் நாயகம் பணித்துள்ளார்.

அவ்வாறே கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட இந்தத் தவிர்க்க முடியாமற்போன சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட இறப்புக்குரிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் தேசிய மட்டத்தில் மிகவும் முக்கியமான ஒன்று என்பதால் அந்த இறப்புகளுக்கான காரணத்தை குறிப்பிடும்போது கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட மரணம் என சரியாகக் குறிப்பிடுமாறும் பதிவாளர் நாயகம் கேட்டுள்ளார்.

இந்த இறப்புகளை பதிவு செய்வதற்கு இரவு பகல் பாராது நடவடிக்கை எடுக்கும் படியும், ஏதாவது பிரச்சினைகள் ஏற்படின், கொழும்பு பிரதான அலுவலகம் 2393073, 23933071, ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது வடக்கு, கிழக்கு, உதவிப் பணிப்பாளர் நாயகம் ந. சதாசிவஐயர் உடன், 021-222 2475 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காணாமற் போனோரின் சடலங்கள் தொடர்ந்தும் கரை ஒதுங்குகின்றன!

## கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை

கடற்கொந்தளிப்பினால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்து மீட்புப்பணிகள் இடம்பெற்று வருவ தாக கடற்புலிகளின் சிறப்புத் தள பதி கேணல் சூசை தெரிவித்தார்.

பி.பி.சி தமிழோசைக்கு நேற்று வழங்கிய பேட்டியில் நேற்று மட்டும் 151 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு தினங்களில் கிட் டத்தட்ட 900க்கும் அதிகமாக உடல களை நாங்கள் மீட்டிருக்கிறோம். இந்தச் சடலங்களில் சிலவற்றை முள்ளியவளையில் வைத்து உற வினர்களிடம் கையளித்துள்ளோம்.

இப்பொழுது பொது இடமாக ஒன்றைத் தெரிவு செய்து அந்தப் பொதுஇடத்தில் சடலங்களை புதைப் பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டி ருக்கிறோம்.

காணாமல் போனவர்களில் உயிருடன் யாரையும் மீட்கவில்லை தொடர்ந்தும் உடல்கள் எடுக்கப் பட்டு வருகின்றன. நேற்றுக் காலை யில் கடலில் ஒதுங்கிய நிலையில் மணற் குடியிருப்புப் பகுதியில் 4 உடல்கள் எடுக்கப்பட்டன. தொடர்ந்து நாயாறு வரைக்குமுள்ள கரையோ ரப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மீட்புப் பணியில் விடுதலைப் புலிகளின் ஒரு பற்றாலியன்தான் இறங்கிஇருக்கிறது. மேலதிகமாக இன்னொரு பற்றாலியனைக் கேட் டிருக்கிறோம். கிட்டத்தட்ட அந்த இரண்டு பற்றாலியன் துணையோடு மீட்புப் பணி மேற்கொள்ளப்படும்.

மற்றும் அரசாங்கத்தில் இருந்து எவரும் உதவிக்கு வரவேயில்லை இப்போது விரல்விட்டு எண்ணக் கூடிய ஒன்று இரண்டு ஸ்தாபனங் கள் வந்தன. ஒவ்வொரு வாகனத் திலும் சொற்ப உடுதுணிகளை மட்டும் கொண்டுவந்துள்ளார்கள்.

கட்டடங்களின் இடிபாடுகளுக் குள் சடலங்கள் உள்ளன. எங்களு டைய பாவனையில் உள்ள கனரக வாகனங்களை வைத்துத்தான் இவ ற்றை மீட்டு வருகிறோம். உண்மை யில் எங்களுடைய முழு வளத் தைப் பயன்படுத்தியும் இந்த மீட் புப் பணியை முழுமையாக செய்ய முடியாது.

இதற்கு அரசாங்கம் உலக நாடு களில் இருந்து பெறும் உதவி களை இங்கே திருப்பவேண்டும். இதன் மூலம்தான் வேகமாக இந்த மீட்புப் பணியை மிக விரைவாக முடிக்கலாம். இல்லையென்றால் குஜராத்தில் ஏற்பட்ட நிலைதான் இங்கு ஏற்படும்.

பூகம்ப அழிவு ஒருபுறம் இருக்க அதன் மூலம் வந்த நோய்களால் ஏராளமானோர் கொல்லப்படடிருக் கின்றனர். இந்த நிலை நீடிக்காது இருப்பதற்கு வெளிநாடுகள் நேரடி யாக வந்து மீட்புப் பணிசெய்தால் இந்த அவலத்தில் இருந்து மக்க ளைக் காப்பாற்றமுடியும் எனத் தெரிவித்தார்.

## அரசாங்க பாடசாலைகள்

# முதலாம் தவணை ஆரம்பம் காலவரையின்றி ஒத்திவைப்பு!

நாட்டில் ஏற்பட்ட இயற்கைப் பேரனர்த்தத்தை அடுத்து சகல அரசாங்கப் பாடசாலைகளினதும் முதலாம் தவணை ஆரம்பம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்ப ட்டிருப்பதாக கல்வி அமைச்சு அறி வித்துள்ளது.

அடுத்த ஆண்டுக்கான முதலாம் தவணை எதிர்வரும் ஜனவரி மாதம 3ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு முன்னர் அறிவித் திருந்தது.

எனினும் எதிர்வரும் 3 ஆம் திகதி முதலாம் தவணை ஆரம்ப மாகாது என்றும், ஆரம்பத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சு நேற்றுத் தெரிவித் துள்ளது.

அதிகமான ஆசிரியர்களும், அதிபர்களும் நிவாரணப் பணிக ளில் ஈடுபட்டிருப்பதனால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சின் உயரதிகாரி தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு உதவிகள்



கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு தொகுதி உதவிப் பொருட்களுடன் கொழும்பு வந்த பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதியுடன்.

(கொழும்பு)

சுனாமி பூகம்பத்தால் பாதிக்கப் பட்ட இலங்கை மக்களுக்கு சர்வ தேச உதவிகள் தொடர்ந்து கிடை த்து வருகின்றன.

மூன்று இஸ்ரேலிய இராணுவ விமானங்களில் 150 மருத்துவர்கள் தாதிமார் மற்றும் மருத்துவப் பொருட்களுடன் நேற்று கட்டுநாயக் கவை வந்தடைந்தன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை பிரிட்டன் அனுப்பி வைத்துள்ளது. பிரிட்டன் உதவி நிவாரணங்களுடன் முதலா வது விமானம் இலங்கை வரவுள் ளது. இங்கிலாந்தின் கட்விக் விமான தளத்திலிருந்து இலங்கை நோக்கி புறப்பட இருந்த விமானத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உட னடி உதவிகளுக்கான தற்காலிக கூடாரங்கள், உடை என்பன எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

2,50,000 பவுண் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் முதல் கட்ட மாக அனுப்பி வைக்கப்படவுள்ள தாகப் பிரிட்டன் அரசாங்கம் அறி வித்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் இரா ணுவ விமானம் மூலம் இலங் கைக்கு நிவாரண உதவிகளை அனுப்பி வைத்துள்ளது.

மருந்துப் பொருட்கள் தற்கா லிக கூடாரங்கள் குடிநீர் என்ப வற்றை ப்ாகிஸ்தான் அனுப்பியி ருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இலங்கையில் நிவா ரண நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக பாகிஸ்தான் 10 மில் லியன் ரூபாவை வழங்கவும் முன் வந்திருப்பதாக அறிவிக்கப்படு கிறது.

இதேவேளை, பிரான்ஸ் வெளி விவகார அமைச்சர் ஒரு விமானத் தில் மனிதாபிமான உதவிப் பொருட் களுடன் நேற்று இலங்கைக்கு குறு கியகால விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தார்.



ஹிக்கடுவப் பகுதியில் கடற் கொந்தளிப்பினால் அடித்துச் செல்லப்பட்ட ரயில் தண்டவாளத்தின் ஒரு பகுதியினைக் காண லாம்.

## அரசாங்க – சர்வதேச...

அத்துடன், ஆயிரக்கணக்கா னோர் காயமுற்றும் காணாமற்போயு முள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வீடு வாசல்களை முற்றாக இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். ஆனால், வடக்கு - கிழக்கு பகுதி களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய உதவிகள் வழங்கப்படாத தால் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ரஷ்யா இந்தியா, இஸ்ரேல் உள் ளிட்ட பல்வேறு நாடுகளும் உதவி களையும், மீட்புக்கான உதவிக் குழுக்களையும் இலங்கைக்கு அனுப்பியுள்ள போதும், தமிழர் தாயகப் பகுதிக்கு எந்த உதவியும் வழங்கப்படவில்லை.

அரசாங்கமும், இதுவரையில் எந்த உதவிப் பணிகளிலும் ஈடு படவில்லை. இதனால், பாதிக்கப் பட்ட மக்கள் மிகவும் விசனம் அடைந்துள்ளனர். தமிழர்கள் என்ற இனப் பாகுபாட்டின் அடிப்படையி தான் இவ்வாறு அரசாங்கம் நடந்து கொள்வதாகவும் குற்றச்சாட்டுக் கள் எழுந்துள்ளன.

இதேவேளை, சர்வதேச சமூகத் திடம் இருந்து பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவிகளைப் பெற்றுக்கொள் வதற்கான இராஜதந்திர முயற்சியில் விடுதலைப் புலிகள் இறங்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### வெள்ளியன்று...

12-10 வரையான 10 நிமிடத் திற்கு அனைத்து வாகனப் போக்கு வரத்தையும் இடைநிறுத்தி ஒவ்வொரு வரும் தங்கள் தங்கள் இடங்களில் எழுந்து நின்றவாறு மௌனப் பிரார்த் தனை செய்யுமாறும் அரசியற்துறை யினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## முன்னாள்...

யிருந்தபோதுதான் கடற்கொந்த ளிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அவர் உதவிக் கோரிக்கை விடுத்ததையடுத்து விமா னப்படை ஹெலிகொப்ரர் ஒன்று அனுப்பப்பட்டு, அவரும் மேலும் ஐந்து பேரும் மீட்கப்பட்டு கொழும் புக்குக் கொண்டுவரப்பட்டனரென விமானப்படைத்தளபதி தெரிவித் தார்.

## தலைவரின் வழிகாட்டலில்...

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான உதவிகளை உடனுக்குடன் செய்ய தாயகத்தில் உள்ள எமது உறவுகளும் புலம்பெயர்வாழ் உறவுகளும் வழங்கிவரும் பெரும் நிதி பெரும் உதவியாக உள்ளது அதற்கு இந்த நேரத்தில் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட எமது மக்களுககு அரசு இதுவரை பெரிய எந்த உத விகளையும் செய்யவில்லை.

புலம் பெயர்ந்த மக்கள் தான் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கான பெரும் உதவி களை செய்ய வேண்டியுள்ளது. உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக வழங்குமாறு வேண்டுகிறேன் என தமிழீழ அர சியற்துறைப் பொறுப்பாளர் தெரி வித்தார்.

## யாழ்ப்பாணத்தில்...

பருத்தித்துறையிலும், 512 பேர் மருதங்கேணியிலும் உயிரிழந்துள் ளனர். காயமடைந்த 530 பேரில் 290 பேர் யாழ்.போதனா வைத்திய சாலையிலும், 240 பேர் பருத்தித் துறை வைத்தியசாலையிலும் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுகளிலி ருந்து 13,562 குடும்பங்களைச் சேர்ந்த 48,729 பேர் இடம்பெயர்ந் துள்ளனர்.

இவர்களில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலிருந்து 83 80 குடும்பங்களைச் சேர்ந்த 28206 பேரும், மருதங்கேணி பிரிவில் 4251 குடும்பங்களைச் சேர்ந்த 16563 பேரும், காரைநகர் பிரிவில் 520 குடும்பங்களைச் சேர்ந்த 2000 பேரும், ஊர்காவற்துறைப் பிரிவில் 250 குடும்பங்களைச் சேர்ந்த 1000 பேரும், நெடுந்தீவு பிரிவில் 251 குடும்பங்களைச் சேர்ந்த 960 பேரும் அடங்குவர்.

யாழ்.மாவட்டத்தில் 39 நலன்புரி நிலையங்களில் 3403 குடும்பங்க ளைச் சேர்ந்த 14177 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். உறவினர், நண்பர்கள் வீடுகளில் 6064 குடும் பங்களைச் சேர்ந்த 20459 பேர் தங்கியுள்ளனர். கிளிநொச்சி மாவட் டத்தில் 3304 குடும்பங்களைச் சேர்ந்த 13026 பேர் தங்கியுள்ளனர்.

## சுனாமி பூகம்பத்தால்...

வருவதால் இறந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென அஞ்சப் படுகிறது.

கடற்கொந்தளிப்பு மற்றும் புவி நடுக்கத்தால் இந்தோனேசியாவே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட் டுள்ளது.

இந்தோனேசியாவில் கடற்கொந் தளிப்புக் காரணமாக 27,174 பேர் பலியாகியுள்ளதாக இந்தோனேசிய அனர்த்த நிவாரணக்குழு தெரிவித் துள்ளது.

இதேசமயம், இலங்கையில் 17,640 பேர் இந்த அனர்த்தங்களில் சிக்கிப் பலியாகி உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் இறந்தோர் எண் ணிக்கை 20 ஆயிரத்தை தாண்டி விட்டதாகவும் கருதப்படுகின்றது.

அந்தமான், நிக்கோபார் தீவுக ளில் 4000 பேர் பலியாகியுள்ள தாகவும் 5 கிராமங்கள் வெள்ளத் தால் அடித்துச் செல்லப்பட்டதால் ஆயிரக்கணக்கானோர் காணா மற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தாய்லாந்தில் 700 வெளிநாட்டு உல்லாசப்பணிகள் உட்பட 1439 பேர் பலியாகி உள்ளதாகக் கணிப் பிடப்பட்டுள்ளது.

மலேசியாவில் 65 பேர் கொல் லப்பட்டுள்ளனர். இவர்களுள் பெரும் பாலானோர் வயோதிபர்களும், சிறு வர்களும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேசமயம் மாலைதீவில் இரண்டு பிரித்தானிய நாட்டு உல் லாசப் பயணிகள் உட்பட 52 பேர் பலியாகியுள்ளதுடன் உல்லாச விடுதி ஒன்றில் தங்கியிருந்த 68 உல்லாசப் பயணிகள் காணாமற் போயுள்ளனர்.

பங்களாதேஷில் உல்லாசப் பயணிகளின் படகு ஒன்று கடலி னால் அடித்துச் செல்லப்பட்டதில் இருவர் பலியாகியுள்ளனர்.

இதேசமயம் கடற்கொந்தளிப்புக் காரணமாக சோமாலியாவில் 100 மீனவர்கள் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட – கிழக்கில் ...

மேலும் 198 சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து, 9852 பேர் உயிரிழந்ததாக உறுதிசெய்யப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வட மராட்சி கிழக்கு பகுதியில் 1171 பேர் உயிரிழந்ததுடன், 688 பேர் காயமுற்றும், மேலும் 59 பேர் காணாமற்போயுமுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 983 பேர் பலியானதுடன், 1386 பேர் காயமடைந்தனர். மேலும், 2750 பேர் காணாமற்போயுள்ளனர்.

திருகோணமலையில் 844 பேர் உயிரிழந்திருப்பது உறுதிசெய்யப் பட்டுள்ளது. இதேசமயம், இங்கு காயமுற்று மற்றும் காணாமற் போனோர் விபரமும் வெளியிடப் படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1504 பேர் உயிரிழந்ததுடன்,612 பேர் காணாமற்போயுள்ளனர். காய முற்றோர். விபரமும் தெரியவர வில்லை.

அம்பாறை மாவட்டத்தில் 5350 பேர் உயிரிழந்ததுடன், 6350 பேர் காணாமற்போயுள்ளனர். காயமுற் றோர் விபரம் தெரிய வரவில்லை.

மொத்தமாக 9852 பேர் உயிரி ழந்ததுடன், 2074 பேர் காயமுற்ற துடன் 9771 பேர் காணாமற்போயுள் ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், 24 ஆயிரத்து 998 குடும்பங்களைச் சேர்ந்த 1லட்சத்து 20 ஆயிரத்து 197 பேர் இடம பெயர்ந்து 221 நலன்புரி நிலையங் களில் தங்கியுள்ளனர்.

## இரு கடற்...

கத்தானை சாவகச்சேரியை சொநத முகவரியாகவும், 156 ஆம் கட்டை விவேகானந்தநகர் கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருநாவுக்கரசு யோகானந்தன் ஆகியோரே சாவடைந்தவர்களாவர்.

இந்த மாவீரர்களுக்கு விடு தலைப் புலிகள் தமது வீரவணக் கத்தை தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.